மலர்-2 இதழ்-36 பிப்ரவரி 16-28 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



ஆறு கண் இரண்டு கை இரண்டு காலுடன் காட்சிதரும்

# குச்சனூர் சனீஸ்வரன்



# பிள்ளையார் எறும்பும்



## கர்ண பரம்பரைக் கதையும்

முப்பத்து முக்கோடி தேவர்கள் முதல் ஓரறிவு கொண்ட உயிரினங்கள் வரை எல்லா ஜீவன்களுக்கும் படியளப்பவர் பரமேஸ்வரன். இதை அறியாதவளா பார்வதிதேவி ஆனாலும் அவளுக்கு, 'இந்தத் தொழிலை ஈசன் சரிவர கவனிக்கிறாரா?' என்றொரு சந்தேகம். அதற்குத் தீர்வு காண முனைந்தாள்.

சிறு பாத்திரம் ஒன்றை எடுத்து வந்து அதற்குள் கறுப்பு எறும்புகள் சிலவற்றைப் பிடித்துப் போட்டு மூடி விட்டாள். 'இந்த எறும்புகளுக்கு ஈசன் எப்படி உணவு அளிக்கிறார், பார்க்கலாம்!' என்பது அவளது எண்ணம். மறு நாள், ”ஸ்வாமி, நேற்று எல்லா ஜீவ ராசிகளுக்கும் படியளந்தீர்களா?” என்று ஈசனிடம் கேட்டாள்.

'உலகநாயகி தன்னோடு விளையாடுகிறாள்!' என்பது ஈசனுக்குப் புரிந்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ”இதிலென்ன சந்தேகம் பாத்திரத்தில் நீ சிறை வைத்த எறும்புகளைப் பார்த்திருந்தால், இந்தக் கேள்விக்கே இடம் இருந்திருக்காது!” என்றார்.

பார்வதிதேவி, ஓடோடிச் சென்று பாத்திரத் தைத் திறந்து பார்த்தாள்! சுறுசுறுப்புடன் சுற்றிக் கொண்டிருந்தன எறும்புகள். அத்துடன் சில அன்னப் பருக்கைகளும் கிடந்தன. 'ச்சேஞ் வீணாக ஸ்வாமியை சந்தேகப்பட்டு விட்டோமே!' என வருந்தினாள் தேவி.

மகேஸ்வரி உனது ஐயம் விலகியதா?” குறும்பாகக் கேட்ட பரமேஸ்வரன், “சரி, சரி விநாயகன் உன்னைத் தேடிக் கொண்டிருந்தான் போய்ப் பார்!” என்றார்.

விநாயகரைச் சந்தித்த பார்வதிதேவி அதிர்ந்து போனாள். ஒட்டிய வயிறும் வாடிய முகத்துடனும் இருந்தார் கணபதி!

ஏனம்மா அப்படிப் பார்க்கிறீர்கள். எல்லா வற்றுக்கும் தாங்கள்தான் காரணம்!” என்றார் விநாயகர்.

என்னச் சொல்கிறாய் நீ?” படபடப்புடன் கேட்டாள் பார்வதிதேவி.

அன்னையே அகிலம் ஆளும் நாயகனின் நித்திய தர்ம பரிபாலனத்தில் சந்தேகம் கொண்டது தாங்கள் செய்த முதல் தவறு. அடுத்தது, அப்பாவி எறும்புகளை பட்டினி போடும் விதம் சிறையிட்டது! தாயின் பழி தனயனைத் தானே சாரும். எனவே, எறும்புகளின் பசியை நான் ஏற்றுக் கொண்டு தாங்கள் எனக்களித்த அன்னத்தை, எறும்புகளுக்கு இட்டேன். பட்டினி கிடந்ததால், எனது வயிறு சிறுத்துப் போனது!” விளக்கி முடித்தார் விநாயகர்.

பார்வதிதேவி கண் கலங்கினாள். விநாயகரை அழைத்துக் கொண்டு சிவனாரிடம் சென்றவள், ”ஸ்வாமி, என்னை மன்னியுங்கள். நான் செய்த தவறுக்கு நம் மகனை வதைக்க வேண்டாம்!” என்று வேண்டினாள்.

”வருந்தாதே தேவி! பக்தர்கள் என்பால் வைக்கும் நம்பிக்கை, சற்றும் குறைவில்லாததாக இருக்க வேண்டும். அந்த 'நம்பிக்கை'க்கு இணையான பூஜையோ வழிபாடோ கிடையாது. இதை, உலக மக்களுக்கு உணர்த்த நடந்த திருவிளையாடலே இது. அன்னபூரணியான நீ, உன் பிள்ளைக்கு அன்னம் அளித்தாய். அவன், அதை எறும்பு களுக்கு வழங்கினான். விநாயகனின் பெருமையைப் போற்றும் வகையில், அவை இனி பிள்ளையார் எறும்புகள் என்றே அழைக்கப் படட்டும்!” என்று அருளினார்.



பிறகு பார்வதியிடம், “எறும்பு உண்டது போக, மீதம் உள்ள அன்னப் பருக்கைகளை விநாயகனுக்குக் கொடு!” என்றார். அப்படியே செய்தாள் பார்வதி. அந்த பருக்கைகளை உண்ட விநாயகரின் வயிறு பழைய நிலைக்குத் திரும்பியது; அவரது பசியும் தீர்ந்தது.

இந்த அருளாடல் சம்பவம், தேய்பிறை சதுர்த்தி திதி நாளில் நிகழ்ந்தது. இதையே சங்கடஹர சதுர்த்தி நாளாக அனுஷ்டித்து விநாயகரை வழிபடுகிறோம் என்று கர்ண பரம்பரைக் கதை ஒன்று உண்டு.

யாருக்கும் துன்பம் கொடுக்காதவர்கள் உயர்ந்தவர்கள் அல்லவா?.. எறும்பு என்றாலே கடிக்கும் சுபாவம் கொண்டது. ஆனால், இந்த கறுப்பு எறும்பு மட்டும் யாரையும் கடிப்பதில்லை. அதனால் சுவாமி எறும்பு என்று குறிக் குறிப்பிடுகிறோம்.

எந்த சுவாமிக்கு படையல் இல்லாவிட்டாலும், பிள்ளையாருக்கு யாராவது ஒருவராவது மறக்காமல், சிதறுகாய் ஒன்றாவது உடைத்து விடுவார். ஒரு வெல்லத்தை வைத்தாவது வணங்குவார். வெல்லத்தையே பிள்ளையாராக கருதி வழிபடுவோரும் உண்டு. இவற்றைத் தேடி இந்த எறும்புகள் அதிகமாக வரும் என்பதால், இதற்கு பிள்ளையார் என்று பெயர் வந்தது.

– பரமேஸ்வரன், வந்தவாசி.


ஆன்மிகமலர் மெயில் புக்




## மீனவர்களுக்கு மரியாதை

# இறப்பவருக்கு மாலை அங்கவஸ்திரம் தந்து சிறப்பிக்கும் சிவபெருமான்

சோழவள நாட்டிலே கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கிய நாகப்பட்டினத்தில் நுழைப்பாடி என்ற கடற்கரை கிராமத்தில் மீனவர் குல மரபிலே திரு அவதாரம் செய்தார் அதிபத்தர். இவர் சிவ பக்தியில் சிறந்து விளங்கினார். ஆழ்கடலுள் சென்று தான் பிடிக்கும் முதல் மீனை சிவபெருமானுக்கென அதைக் கடலிலே விட்டு விடுவதை வழக்கமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். இறைவன் மேல் கொண்ட அன்பின் காரணமாக தன்னால் இயன்ற இந்த செயலை சிவத் தொண்டாக புரிந்து வந்தார். மீன் பிடிப்பதில் அதிபத்தர் வல்லவராக திகழ்ந்தார். இவருடைய இந்தத் தொண்டை உலகம் அறியச் செய்ய ஈசனார் திருவுளம் கொண்டார்.

வழக்கமாக நிறைய மீன் பிடித்து வரும் அதிபத்தருக்கு சில நாள்களாக வலையில் ஒரே ஒரு மட்டும் அகப்படும் அவர் தன் தொண்டில் பிறழாது அதையும் ஈசனுக்கென கடலிலே விட்டுவிடுவார் எவ்வளவு சோதனை




வந்தாலும் தாம் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்தார். மீன் விற்று பிழைப்பு நடத்தும் அவருக்கு மீன் கிடைக்கததால் மிகவும் வறுமையின் பிடியில் அகப்பட்டார் . ஒரு நாள் மீன் பிடிக்க சென்றார் அன்றும் அப்படியே ஒரு மீனும் அகப்படவில்லை ஒரே ஒரு மீன் அகப்பட்டது அந்த மீன் தங்க மீன் தக தக வென ஜொலித்தது அவருடன் மீன் பிடிக்க வந்தவர்கள் உன்னுடைய கஷ்டத்திற்கு தீர்வு வந்து விட்டது என்று மகிழ்ச்சியில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த மீனை கடலில் விட்டார்.

அனைவரும் திகைத்தனர் என்ன இப்படி செய்து விட்டாரே என்று அங்கலாய்த்தனர் அதற்கு அதிபத்தர் அவர்களது வார்த்தைகளை சற்றும் பொருட்படுத்தாது என் இறைவனுக்கு அளிக்க பொன் மீன் கிடைத்தற்கு அடியேன் அளவற்ற ஆனந்தம் கொள்கிறேன் என்று






உரைத்தார். திகைப்புடன் அவரை அவர்கள் நோக்கிக் கொண்டிருக்கும் போது இடப வாகனத்தில் ஈசனார் தோன்றினார் தான் செய்யும் தொண்டில் இருந்து சிறிதும் பிறழாது வாழ்ந்த அதிபத்தரை தமது திருவடியின் கீழ் இருக்குமாறு திருவருள் செய்தார். அவரது பக்தியை மெச்சிய அம்பிகையுடன் காட்சி கொடுத்து முக்தி கொடுத்தார். இவர் நாயன்மார்களில் ஒருவராகும் அந்தஸ்தை பெற்றார்!!!

அவ்வாறு ஈசன் அதிபத்தருக்கு அருள்பாலித்த திருத்தலம்தான் காயாரோகணேஸ்வரர் கோயில், இத்திருக்கோயில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளது.

நாகப்பட்டினம் பஸ் ஸ்டாண்டிலிருந்து 2 கி.மீ., தூரத்தில் இக்கோயில் அமைந்துள்ளது.

அதிபத்தருக்கு இக்கோயிலில் சன்னதி இருக்கிறது. ஆவணி மாத, ஆயில்யம் நட்சத்திரத்தன்று இவரது குருபூஜை விழா நடக்கிறது. அன்று அதிபத்தர் உற்சவர் ஒரு கட்டுமரத்தில் எழுந்தருளி, கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்வார். அப்போது மீனவர்கள், இரண்டு தங்க மீன்களை வலையில் வைத்து, கடலில் பிடித்ததைப் போல பாவனை செய்வர். அவ்வேளையில் இத்தலத்து சிவன், கடற்கரையில் எழுந்தருளுவார். அவருக்கு அதிபத்தர், தங்க மீன் படைத்து பூஜை

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

செய்வார். அதன்பின் சிவன் அவருக்கு காட்சி தரும் வைபவம் நடக்கும். இந்த விழாவின்போது மட்டுமே தங்க மீனை பார்க்க முடியும்!!!

கோயிலுக்கு அருகில் யாராவது இறந்து விட்டால், நடையை சாத்திவிடுவது வழக்கம். ஆனால், இத்தலத்தில் இறந்த பிணத்திற்கு சிவன் அணிந்த மாலை, வஸ்திரத்தை அணிவிக்கும் வழக்கம் இத்தலத்தில் மட்டுமே உள்ளது.

சிவனருளால் முக்தி பெற்ற மீனவ குலத்தைச் சேர்ந்த அதிபத்தருக்கு மரியாதை தரும் விதமாக, இவ்வூரில் மீனவர்கள் யாராவது இறந்துவிட்டால் அவர்களுக்கு சிவன் சார்பில் மரியாதை செய்யும் வைபவம் நடக்கிறது. இறந்தவரின் உடலை, இங்கு கோயிலுக்கு முன்பாக வைத்துவிடுகின்றனர். அப்போது சிவன் சன்னதியை அடைக்காமல், அவருக்கு அணிவித்த மாலை, வஸ்திரம் ஆகியவற்றை பிணத்திற்கு அணிவித்து, தீர்த்தம் கொடுக்கின்றனர்!!!

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல் பெற்ற தலம் இது. சுந்தரர் பதிகம் பாடி, சிவனிடம் முத்தாரம், வைரமாலை, கத்தூரி, கமழ்சாந்து மற்றும் குதிரை ஆகியவற்றை இத்தலத்தில் பெற்றார். சப்தரிஷிகளான மார்க்கண்டேயர், கவுதமர், வசிஷ்டர், காஷ்யபர், புலஸ்தியர், அகத்தியர், ஆங்கிரசர் ஆகியோர் இங்கு சிவனை வழிபட்டுள்ளனர். மூலஸ்தான லிங்கத்திற்கு பின்புள்ள சுவரில் சிவனின் "சோமாஸ்கந்த' வடிவம் இருக்கிறது. மாசி மகத்தன்று, சிவன் கடலுக்குச் சென்று, தீர்த்தமாடும் வைபவம் நடக்கும்.

எண்திசைகளுக்கு அதிபதிகளான அஷ்டதிக் பாலகர்கள், இங்கு சிலை வடிவில் காட்சி தருகின்றனர். நான்கு தந்தங்கள் கொண்ட, இரண்டு யானைகள் அபிஷேகம் செய்தபடி இருக்க, இரு கால்களையும் தொங்கவிட்டபடி உள்ள கஜலட்சுமியையும் இங்கு தரிசிக்கலாம். வாமி கோஷ்டத்தில் 8 சீடர்களுடன் தெட்சிணாமூர்த்தி இருக்கிறார். கடலுக்கு மேற்கு கரையில் அமைந்த இத்தலத்தில், சிவன்




அரசராக இருந்து ஆட்சி செய்வதாக ஐதீகம். எனவே இவ்வூருக்கு, "சிவராஜதானி' என்ற பெயரும் உண்டு!!!

பெருமாள் கோயில்களில் ஆதிசேஷன் என்னும் நாகம் சுவாமியின் தலைக்கு மேலே, குடை பிடித்தபடி இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். ஆனால், விநாயகர் தன் தலைக்கு மேலே நாகத்துடன் இருப்பதை தரிசித்திருக்கிறீர்களா?

இக்கோயில் முகப்பிலுள்ள விநாயகர், உடலில் நாகத்தை ஆபரணமாக சூடி, தலைக்கு மேலே, மற்றொரு நாகம் குடை பிடித்தபடி இருக்க அதன் கீழே காட்சி தருகிறார். எனவே இவர், "நாகாபரண விநாயகர்' என்று அழைக்கப்படுகிறார்!!!

பைரவர், இங்கு சிம்ம வாகனத்துடன் காட்சி தருகிறார். புண்டரீக தீர்த்தக்கரையில் இவரது சன்னதி இருக்கிறது. புண்டரீகர், சிவனை வழிபட்டபோது, காசியின் கங்கை தீர்த்தம் இங்கு பாதாளத்திலிருந்து பொங்கியது. அப்போது, கங்கைக்கரையில் உள்ள பைரவரும், இங்கு எழுந்தருளினார். இவரே இங்கு, "காலசம்ஹார பைரவராக' அருளுகிறார். இவருக்கு பின்புறம் சிம்ம வாகனம் இருக்கிறது. காலனை (எமன்) சம்ஹாரம் செய்த சிவனே, இங்கு பைரவர் வடிவில் அருளுவதாக ஐதீகம். இவர் எமனுக்குரிய தென்திசையை நோக்கியிருப்பதால், ஆயுள் பலம் கிடைக்க இவரிடம் வேண்டிக்கொள்ளலாம். இவர் உக்கிரமானவராக காட்சி தருவதால், சாந்தமாக்க எதிரில் இரண்டு விநாயகர்களை ஒரு சன்னதியில் பிரதிஷ்டை செய்துள்ளனர். பிரகாரத்தில் எட்டு கரங்களில் ஆயுதங்களுடன், "அஷ்டபுஜ பைரவர்', அஷ்டபுஜ காளிக்கும் சன்னதி இருக்கிறது!!!

இத்தலத்து விருட்சமான மாமரம், இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என மூன்று சுவைகளுடன் இருக்கிறது. இம்மரம் கோயிலின் தென்கிழக்கு பிரகாரத்திலிருந்து பார்க்கும் போது, நந்தி வடிவில் தோற்றமளிக்கிறது!!!

மேலும் இத்தலம் தொடர்பாக தொடர்புகொள்ள +91–4365–242844 9894501319





வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

ஆன்மிகமலர் டிரஸ்ட்
Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.
எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
8825844033

## ஏழ்மையால் தானம் பெறும் மக்கள்

# தலைகுனிந்த அரசன்



பஞ்ச பாண்டவர்களில் முதல்வரான தர்மர் தான் உலகிலேயே மிக அதிக தர்மம் செய்தவர் என்பார்கள்.

தன்னைத் தவிர இவ்வுலகில் அதிக தானம் செய்பவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது என்பது தர்மரின் எண்ணம். இதுவே, அவருக்கு அகந்தையாக மாறி விடக் கூடாது என்ற எண்ணம் கண்ணபிரானுக்கு ஏற்பட்டது.

எனவே அவர் தர்மருடன் மலை நாட்டுக்கு சென்றார். அந்த நாட்டை மகாபலி சக்கரவர்த்தி ஆண்டு வந்தார்.

அங்குள்ள ஒரு வீட்டிற்குச் சென்று குடிப்பதற்கு தண்ணீர் கேட்டனர்.

அவ்வீட்டு பெண்மணி தங்கச் செம்பில் அவர்களுக்கு தண்ணீர் கொடுத்தாள். அவர்கள் குடித்து முடித்ததும் செம்பை வீசி எறிந்து விட்டாள்.

தர்மர் அவளிடம், “தங்கச் செம்பை பத்திரமாக வைத்திருக்க வேண்டாமா? தெருவில் வீசி எறிந்து விட்டீர்கள்,’’ என ஆச்சரியமாகக் கேட்டார்.

அதற்கு அந்த பெண்மணி, “எங்கள் நாட்டில் ஒரு முறை பயன்படுத்திய பொருளை மறுமுறை பயன்படுத்துவதில்லை, என அலட்சியமாக சொல்லி விட்டு போய் விட்டாள்.

அந் நாட்டின் செல்வச் செழிப்பை எண்ணி வியந்தார் தர்மராஜன். அவர்கள் மகாபலியின் அரசவைக்கு சென்றனர்.



கண்ணபிரான் தர்மரை மகாபலியிடம் அறிமுகப்படுத்தி, “இவர் தான் இவ்வுலகிலேயே அதிக தர்மம் செய்தவர், பெயரே தர்மர்,’’ என்றார்.

மகாபலி தர்மரின் முகத்தில் கூட விழிக்கவில்லை.

“கண்ணபிரானே! தாங்கள் சொல்வதெல்லாம் சரி தான். என் நாட்டு மக்களிடம் உழைப்புக்கு பஞ்சமில்லை. எல்லோரிடமும் செல்வம் குவிந்து கிடக்கிறது. எனவே “பிச்சை’ என்ற சொல்லுக்கே இடமில்லை.

அதனால் “தர்மம்‘ என்ற வார்த்தைக்கும் இங்கு அவசியமில்லை. எனவே அவர்கள் தானம் பெறவேண்டிய அவசியமும் இல்லை. இவரது நாட்டில் ஏழைகள் அதிகமாக இருக்கிறார்கள் போலும். எனவேதான் எல்லோரும் தானம் கேட்டு வருகின்றனர். இவ்வளவு ஏழைகளை தனது அரசாட்சியின் கீழ் வைத்திருக்கும் இந்த தர்மரின் முகத்தைப் பார்க்க வெட்கப்படுகிறேன்,’’ என்றார்.

**தனது ஆட்சியின் நிலைமையை நினைத்து தலை குனிந்தார் தர்மராஜா.**

# வெற்று இலை



தாவரவியல் மாணவனுக்கு பெரியவாளின் விளக்கம்

ஒரு சமயம் காஞ்சிமடத்தில் மகா சுவாமிகளைச் சந்திக்க ஒரு மாணவன் வந்திருந்தான். அவனிடம் சுவாமிகள்,””என்ன படிக்கிறாய்?’’ என்று கேட்டார். மாணவன் தாவரவியல் படிப்பதாகக் கூறினான்.

சுவாமிகள் தன் முன் வைத்திருந்த பழம், பாக்கு, வெற்றிலைத் தட்டில் இருந்த வெற்றிலையைக் காட்டி,””இதன் பெயர் என்ன?’’ என்று கேட்டார். மாணவனும் “வெற்றிலை’ என்றான்.

“அதற்கு ஏன் வெற்றிலை என்று பெயர் வந்தது?’’ என்று கேட்டார். மாணவன் திகைத்தான், மற்றவர்களும் விழித்தார்கள்.

மகா சுவாமிகள் கூறினார்,””எல்லாக் கொடிகளும் பூ விடும், காய் காய்க்கும், ஆனால் வெற்றிலைக் கொடி பூக்காது, காய்க்காது, உட்கொள்ளக்கூடிய வெறும் இலை மட்டும்தான் விடும். அதனால் அது வெற்று இலை ஆயிற்று’’ என்று கூறினார்

# அதிர்ஷ்டம் தரும் அபூர்வ சிலைகள்



பெரும்பாலானவர்களின் வீடுகளில் உள்ள பூஜை அறைகளும் பல தெய்வ சிலைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

வீடுகளில் இத்தனை தெய்வ சிலைகளை தான் வைத்திருக்க வேண்டும் என்பதில்லை என்பதால், பலரும் பல வித்தியாசமான மற்றும் அழகிய தெய்வ சிலைகளை பூஜை அறையில் வைப்பார்கள்.

ஆனால் வீட்டு பூஜை அறையில் குறிப்பிட்ட 3 தெய்வ சிலைகளை வைத்திருப்பதன் மூலம், வீட்டில் உள்ள பணப்பிரச்சனை நீங்கி, குடும்பத்தில் அமைதியும் சந்தோஷமும் அதிகரிக்கும்.

## மஞ்சளால் ஆன விநாயகர்

சிலை மஞ்சள் அல்லது தங்க முலாம் பூசப்பட்ட விநாயகர் சிலையை வைத்திருந்தால், வீட்டில் உள்ள வாஸ்து தோஷங்கள் நீங்கும்.

வேண்டுமெனில் வீட்டில் உள்ள மஞ்சள் பொடியை நீர் சேர்த்து கலந்து, விநாயகர் சிலையை செய்தும் பூஜை அறையில் வைத்துக் கொள்ளலாம்.

## மரத்தால் ஆன விநாயகர் சிலை

ஆல மரம், மா மரம் அல்லது வேப்ப மர மரத்தாலான விநாயகர் சிலையை பூஜை அறையில் வைத்திருப்பது மிகவும் நல்லது.

இந்த வகையிலான தெய்வ சிலை, வாழ்வில் உள்ள பிரச்சனைகள் நீங்கி, சந்தோஷமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்

## சிவனின் சிலை

பலரும் சிவபெருமானின் சிலையை வைத்திருப்பது வீட்டில் அதிர்ஷ்டத்தை அதிகரிக்கும் என நினைத்து வைத்திருக் கின்றனர்.

ஆனால் ஒரு பூஜை அறையில் ஒரே ஒரு சிவனின் சிலை தான் இருக்க வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட சிவனின் சிலைகள் பூஜை அறையில் இருந்தால், அது வீட்டில் பிரச்சனைகளுக்கு தான் வழிவகுக்கும். எனவே ஒரே ஒரு சிவனின் சிலையை மட்டும் வைத்து வணங்குங்கள்.










## "ஆன்மிகமலர் மெயில்புக்"

ஒருசில வாசகர்களுக்கு கிடைக்கவில்லை என்று கவலை கொள்ளவேண்டாம்.

**www.aanmeegamalar.com**

இணையதளத்தில் மின்நூல் பகுதியில்

இதுவரை வெளிவந்த இதழ்கள் அனைத்தையும்

android mobile, android tablet, laptop, desktop computer

இலவசமாக டவுன்லோடு செய்து படிக்கலாம்.

மற்றவருக்கும் நமது இலவச புத்தக சேவைப்பற்றி தெரியப்படுத்தவும்

# நமது சொந்த வரையறைகளை நாம் கனவு காண்கிறோம்

குருதேவர் அருளுகிறார்: "யோகதா சத் சங்கம்' என்பது வாழ்க்கையின் ஒரு தத்துவம். சரியான தியானம், சரியான சிந்தனை மற்றும் சரியான வாழ்க்கை. உங்கள் குழந்தைகளை இந்த தத்துவத்தில் வளர்த்துவாருங்கள். அவர்களுக்கு அதிக செல்லம் கொடுக்காதீர்கள். அல்லது தவறான எடுத்துக்காட்டுகள் மூலம் அவர்களது தேகங்களுக்கும் கெடுதல் நிறைந்த ஆசைகளுக்கும் இடமளிக்காதீர்கள். அவர்களுக்கு நல்ல பயிற்சியை அளியுங்கள். ஏன் அவர்களை மாயைக்கு அடிமைப்படுத்தவேண்டும்? அவர்களது வாழ்க்கைகளை எளிதாக வைத்து அவர்கள் அகத்தே அக அமைதியையும் ஆனந்தத்தையும் வளர்ப்பதன்மூலம் அவர்களுக்கு உண்மையான சுதந்திரம் அளியுங்கள். அதையே உங்கள் வாழ்க்கையிலும் செய்யுங்கள். எதனாலும் பிணைக்கப்பட்டிருக்காதீர்கள். இந்த தத்துவம் உங்களைக் காப்பாற்றும்."

## வாழ்க்கையை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்ளாதீர்கள்

மேலும் அவர் கூறுகிறார்: "இந்த உலகம் ஒரு பயங்கரமான உலகம். இங்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. நாம் என்ன செய்யவேண்டும் என்றால், வாழ்க்கையை நாம் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்வதை நிறுத்தவேண்டும். ஒரு தத்துவத்தை உறுதியாக எடுத்துக்கொண்டால் மாயை வெல்லப்படமுடியும். இங்குள்ள எல்லாமே இறைவனின் சலனப்படத்தைத் தவிர வேறு எதுவுமில்லை. நாம்தான் நடிகர்கள். நமது பாகங்களை நாம் நன்றாக நடிக்கவேண்டும். ஆனால் நாடகத்தோடு நம்மை மிகத்தீவிரமாக அடையாளப் படுத்திக்கொள்ளக்கூடாது. இந்த அகவிடுதலைக்கான வழியை தியானம் நமக்குக்காட்டுகிறது. இந்த உலகம் ஒரு கனவு. அவன் இந்தக் கனவு பூமியைப் படைத்திருந்தாலும், அதிலிருந்து எப்படி வெளியே வருவது என்பதற்கான வழியையும் அவன் காட்டியிருக்கிறான்."



மேலும் அவர் கூறுகிறார்: "தியானத்தில் மாயை கனவுகள் மறைகின்றன. உங்கள் அகத்தே உள்ள அந்தத்தூய உணர்வுநிலை என்னும் இறைவனின் பிரதிபலிப்பு அல்லது பிரதிபிம்பத்தை உணர்ந்து அதை வெளிப்படுத்தும் முயற்சிதான் தியானமாகும். தேக உணர்வுநிலை என்னும் மாயை மற்றும் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருக்கும் தேகம் மற்றும் மனதின் 'தேவையற்ற தேவைகள்' பற்றிய கோரிக்கைகள் ஆகியவற்றை நீக்குங்கள். எவ்வளவு எளிமையாக உங்களால் இருக்கமுடியுமோ அவ்வளவு எளிமையாக இருங்கள். உங்கள் வாழ்க்கை எவ்வளவு குழப்பமற்றதாகவும் மகிழ்ச்சியாகவும் மாறமுடியும் என்பதைக் கண்டு நீங்கள் வியப்புறுவீர்கள். எனவே நீங்கள் உங்களை சுதந்திரமாக்குங்கள். இல்லையேல் மரணம் உங்களை வியப்பிலாழ்த்தும். மேலும் நீங்கள் எவ்வளவு பற்றுள்ளவராக உள்ளீர்கள். இந்த உலகத்திலிருந்து புறப்படுவதற்கு எவ்வளாவு தயாராகயில்லாத நிலையில் உள்ளீர்கள் என்பதை வலியுடன் கற்றுக்கொள்வீர்கள். ஆனால் சரியான வாழ்க்கை, சரியான சிந்தனை மற்றும் சரியான தியானம் வாயிலாக எல்லையற்றவனை நோக்கி நீங்கள் மின்னல் வேகத்தில் விரைந்துள்ளீர்களானால் வாழ்வு மற்றும் சாவு என்னும் கனவுகள் இறைவனது சாசுவத இருப்பு 'என்றும் புதிய ஆனந்த'த்தில் மறைந்துவிடும். எனவே தியானம் என்பது இந்த உலகத்திற்கு இறக்காமல் இறப்பதாகும்."

அவர் அருளுகிறார்: "உங்கள் உண்மையான மற்றும் இயல்பான பரம்பொருளை மற்றும் ஆன்மாவின் இறைவனுடன் ஒன்றிய தன்மை யை அனுபவிக்கிறீர்கள். சமாதி தியானத்தில் நான் இந்த ஆனந்தமயமான சுதந்திரத்தை அனுபவிக்கிறேன். மேலும் நீங்கள் கூட மாயைக்கு அப்பால்உயர்ந்து உங்கள் உண்மையான தன்மையை அறிவதற்கு கடும் முயற்சி செய்ய தியானம்தான் வழி.

உங்களால் அந்த உணர்வு நிலையை செயல்பாடு மற்றும் தியானவேளைகளில் தக்க வைத்துக் கொள்ள முடியுமென்றால், மாயை அனுபவங்களினால் நிலை குலையாமல் தொடர்ந்திருக்க முடியுமென்றால் பிறகு நீங்கள் இறைவனின் கனவு உலகத்திற்கு அப்பால் இருப்பீர்கள். மாயையின் கனவு உங்களுக்கு முடிந்துப்போயிருக்கும். அதனால்தான் பகவான் கிருஷ்ணன், இவற்றிலிருந்து உங்களுக்கு விடுதலை வேண்டுமென்றால், நீங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் சமநிலை மனமுடையவராக இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார்,

"எவன் இவற்றால்(புலன்கள் அவற்றின் பொருட்களுடன் தொடர்பு கொள்ளுதல்) அமைதிகுலையானோ, இன்பதுன்பங்களில் அமைதியும் சமநிலையும் கொண்டுள்ளானோ அவனே சாகாநிலைக்குத் தயாராகிறான்." என்று கூறியுள்ளார். (பகவத்கீதை அத்தியாயம் 2 ஸ்லோகம் 15) எனவே 'ஒருபோதும் மனத்தளவில் அமைதி குலையாதீர்கள்' என்று குருதேவர் வலியுறுத்துகிறார்.

குருதேவர் கூறுவது முற்றிலும் உண்மையே. எவ்வாறெனில், ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் அவனுடைய அன்றாடச் செயல்களில் மிகமுக்கியமான செயல் இறைத் தேடுதலேயாகும். அது தியானத்தால் செய்வதே மிக மேன்மையானது.

தியானத்தால் மட்டும்தான் இறைவனை அடையமுடியும் என்பதை குருதேவர் உணர்த்துகிறார். அவ்வாறு இறைவனை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடைய, தியானத்தால் முன்னேற்றமடைந்த ஒரு இறைபக்தன் எவ்வாறிருப்பான் என்பதை கூற விரும்புகிறேன். முதலில் ஒருவனுடைய அவ்வாறான உண்மையான தியானம் இறைவனுக்கான ஏக்கத்தை உற்பத்திசெய்து ஆன்மாவை 'கனன்று' கொண்டிருக்கச்செய்கிறது. அவ்வாறான ஒரு பக்தன் இறைவனிடம் எவ்வாறு பிரார்த்தனை செய்வான் என்பதைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன். ஏனென்றால் இறைவன் நம் வாழ்க்கையில் அன்றாடம் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட கதாபாத்திரங்களை நடிக்கச் சொல்கிறான். நாமும் நடித்துக்கொண்டிருக்கிறோம்.' இறைவனை அடையவேண்டும்' என்ற நம் குறிக்கோள் நிறைவேறவேண்டுமென்றால் அவன் நமக்கு அருளியுள்ள கதாபாத்திரங்களை செவ்வனே நடித்து முடிக்கவேண்டும். அதற்காக பக்தன் ஒவ்வொரு காலைவேளை தியானத்தின்போதும் கீழ்க்கண்டவாறு பிரார்த்தனை செய்வான்.

"இறைவா! இன்றைக்கு எனக்கு தாங்கள் எப்படிப்பட்ட கதாபாத்திரத்தை அளித்து அதன்படி நடிக்கச் சொன்னாலும் நான் அவற்றை தங்களுக்காக நடிக்கிறேன். ஆனால் அந்தக் கதாபாத்திரங்களை முறையாகவும் செம்மையாகவும் செய்வதற்கும் அவை பிறர் பயனடையும்படி நன்றாகவும் தவறின்றியும் நடிக்க எனக்கு தாங்கள் அருளவேண்டும்! அதற்காக தாங்கள் எனக்கு உதவவேண்டும்!" இவ்வாறு ஒவ்வொரு காலைவேளை தியானத்தின் போதும் பிரார்த்தனை செய்வான்.

பின்னர் இரவு படுக்கைக்குச் செல்லும் பொழுது, இறைவனிடத்தில் "இறைவா! இன்றைக்கு எனக்கு தங்களின் திருவுள்ளப்படியே கனிந்து அருளப்பட்ட கதாபாத்திரங்களை தாங்கள் என்னை நன்றாக நடிக்க வைத் தீர்கள். அது தங்களின் அருளே!. அதற் காக என்னுடைய இதயப்பூர்வமானநன்றியினை தங்களிடத்தில் பணிந்து சமர்ப்பித்துக் கொள்கின்றேன்!"என்று பிரார்த்தனை செய்துகொள்வான்.

நிலையற்ற இவ்வுலகில் எதுவுமே நிரந்தரமில்லை என்பதை ஒவ்வொரு மனிதனும் அறியவேண்டும். ஆனால் மிகவும்

**28 பாகம்**

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

**மனித வாழ்வு மேம்படுவதற்காக**



ஆன்மிகமலர் மெயில் புக்

முக்கியமானது என்னவென்றால் வாழ்க்கையில் ஒழுக்கம், மனத்தூய்மை (காம, குரோத, லோப, மோக, அகங்காரம், பொறாமை போன்றவை இல்லாதிருத்தல்) மனவலிமை, இறைவனிடத்தில் விசுவாசம், ஆழ்மனதில் 'இறைவனையன்றி இவ்வுலகில் வேறு யாரும் இல்லை; எந்தப்பொருளும் இல்லை; இறைவன் மட்டும்தான் அனைத்திற்கும் மேலான பொருள். இறைவனால் மட்டும்தான் நம்மை பாதுகாக்கமுடியும்; அதனால் இறைவன் வருவான்' என்ற திடமான நம்பிக்கை ஆகியவை அந்த பக்தனிடத்தில் இருக்கும். அதற்குமேல் முயற்சி, பயிற்சி இவைகளுடன் அவன் இருப்பான். அனைத்திற்கும் மேலாக பொறுமை தேவை. 'எவ்வளவு காலமானலும் நான் இறைவனுக்காகக் காத்திருப்பேன்; அவனுக்காக வாழுவேன். நிச்சயம் அவன் வருவான் என்ற நம்பிக்கையுடன் இருப்பான். இவ்வளவும் ஒருவனுக்கு இருந்தால் இறைவன் தன்னுடைய கடமையைச் செய்வான். அப்படியென்றால் அவன் தன்னை அந்த பக்தனுக்கு வெளிப்படுத்துவான் என்று பொருள். வாழ்க்கை என்பது மனிதனுக்கு இறைவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள சோதனைக்கூடம். மனித உடல் என்பது சோதனை செய்வதற்கான கருவி. உலகம் மாயை. வாழ்க்கை கனவு. மாயையாகின்ற இந்தச் சோதனைக்கூடத்திலிருந்து தன்னை (ஆத்மாவை) விடுவித்துக்கொள்வதே ஒருவனுடைய லட்சியமாக இருக்கவேண்டும். இந்த மாயையை வெல்வதற்குக் காலம் பிடிக்கும். வாழ்க்கையை சாதாரணமாகவோ விளையாட்டாகவோ நினைக்கவேண்டாம்.

சாதாரண மனிதர்கள் உலகப்பொருள் ஒன்றினை ஆசைப்பட்டால் அது கிடைக்கப்பெறுவதற்கு மிகவும் கஷ்டப்படவேண்டும்.

அது கிடைக்கப்பெறுவதற்கு அதிகமாக உழைக்கவேண்டும். அவ்வாறிருக்கையில் இறைவனைக் கண்டறிவதற்கு எவ்வளவு துன்பங்கள் அனுபவித்தால் அந்தப்பேற்றைப்பெறமுடியும்! அந்தத் துன்பங்கள் ஆத்மாவை கரையேறவைப்பதற்கான (இறைவனடி சேர்ப்பதற்கான) மேன்மையான பாதையைக் காட்டுகின்றன. இறைவனுடன் மானசீகமாக இறைவனின் சாம்ராஜியத்தில் வாழ்வதாக உணர்பவர்களுக்கு இறைவனைக் கண்டறியும் பேற்றைப் பெறமுடியும். அதைக் கூற வார்த்தைகள் மிகவும் பற்றாக்குறையாக உள்ளன.

"நல்ல எண்ணங்களாகின்ற விதைகளை மனமாகின்ற மண்ணில் விதைத்துஇறைவனுடனான வாழ்க்கை வாழும் எண்ணங்கள்அதற்கு நல்ல நீர் பாய்ச்சி, களை எடுத்து, இறை எண்ணங்களல்லாத மற்ற எந்த எண்ணங்களும் நுழையாமல் வேலி போட்டுப் பாதுகாக்கவேண்டும்" என்று குருதேவர் கூறுகிறார். அது எவ்வளவு கடினமான பணி. எவ்வளவு கடினமானதானாலும் இறைவன் மற்றும் குருதேவரின் திருவுள்ளப்படியே நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்தோமேயானால் இறைவனுடன் வாழவேண்டும் என்ற எண்ணம் நிறைவேறிவிடும்.இறைசித்தத்தை உணர்ந்து இறைவிதிமுறைகளை மீறாமல் வாழ்வது சாத்தியமாகும்.

இறைவனை நேசிக்கின்ற, இறைவனைச் சரணடைந்த, இறைவனை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடைய ஓர் ஆத்மாவிற்கு பல்வேறு சோதனைகள் வருவது உண்மையே. இறைவனை அவ்வளவு எளிதில் அடையமுடியாதல்லவா! இறைவனுடனுள்ள பிரிவினையால் பக்தன் மிகுந்த சோர்வுடனிருப்பான். 'இறைவனைப் பிரிந்து வந்தோம்; அவனைப் பிரிந்திருக்கிறோம்' என்ற உணர்வு வரும்பொழுதுதான் சோர்வுறுகிறது. அந்தச் சோர்வு வளர்ந்து ஏக்கமாகிறது.

ஏக்கத்துடன் தவிப்பும் ஏற்படுகிறது. அவை தீவிரமடைகிறது. அந்த ஏக்கமும் தவிப்பும் சிறிதுசிறிதாக இறைவனுடனுள்ள நெருக் கத்தை ஏற்படுத்துகிறது. அந்த நெருக்கம் அதிகரிக்கும்பொழுது அது காதலாக மாறுகிறது. உண்மையான அன்புடைய கணவனைப் பிரிந்த மனைவி அல்லது காதலனைப் பிரிந்த காதலி எவ்வாறு துயரடைந்தவாறு இருப்பார்களோ, அவ்வாறே இறைவனைப் பிரிந்த, இறைவனுடன் நெருக்கமான, உண்மையானதும் நிபந்தனையற்றதுமான அன்புடைய ஓர் இறை பக்தன் இருப்பான். ஒவ்வொரு நொடியிலும் 'இறைவனைக் காணவேண்டும்' என்ற ஏக்கத்துடன் அவனை எண்ணித் தவித்தவாறு நாட்களைக் கடத்திக்கொண்டிருப்பான். 'ஒருநாள் வாழ்ந்தாலும் இறைவனுடன் வாழ்வதே பலயுகங்கள் வாழ்வதற்குச் சமம்; அதுதான் அவனுக்கு சொர்க்கம் என்றும், அது அவனுக்கு மிகுந்த ஆனந்தத்தையும் மகிமையையும் உணரக்கூடிய வாழ்க்கை என்றும் இறைவனையன்றி, இறை தொடர்பின்றி பல காலம் வாழ்ந்தாலும் அது ஒரு நாள் வாழ்வதற்குச் சமம் என்றும் அவ்வாழ்க்கை அவன் நரகத்தில் வாழ்வதற்குச் சமம் என்றும் அவன் எண்ணுவான். அந்த நிலை வந்த ஒரு பக்தன் எப்படியாவது இறைவனைக் கண்டால் போதும் என்று உருகுவான். அதாவது மிகுந்த தாகம் இருக்கும்போது எவ்வளவு ஆவலுடன் தண்ணீர் அருந்துவோமா அதேபோன்றுள்ள பேராவலுடன் இறைபக்தன் இறைவனைக் காணத் துடிப்பான். வேறு எதுவும் அவனுடைய கண்களுக்குப் பிடித்தமானதாக இருக்காது. இறைத் தேடுதலின்பொழுது என்ன துன்பம் நேர்ந்தாலும் அவற்றையெல்லாம் பக்தன் பொறுத்துக்கொள்வான். அத்துன்பங்கள் யாவற்றையும் அவன் சாதாரணமாகத்தான் கருதுவான். அதற்கான சக்தியையும் மனவலிமையையும் இறைவனே அவனுக்கு அருளுவான். அந்தத் துன்பங்கள் எதுவுமே பெரிதல்ல; தனக்கு இறைவனின் தரிசனம் ஒன்றே போதும் என்று எண்ணுவான். அப்படிப்பட்டவர்களுக்கு இறைவன் மட்டும்தான் குறிக்கோளாக இருக்கும். அந்த பக்தன் தனக்கு எது கிடைத்தாலும் அதை முதலில் அவன் இறைவனுக்கு சமர்ப்பணம் செய்வான். அன்றாட உணவினைக்கூட முதலில் இறைவனுக்கு நிவேதித்த பின்னர்தான் அவன் உணவு உட்கொள்வான். பொதுவாக நம் வீட்டிற்கு நண்பர்களோ அல்லது உறவினர்களோ வந்தால் அவர்களுக்கு உணவளித்த பின்னர்தானே நாம் உணவு உட்கொள்வது வழக்கம். அவ்வாறிருக்கையில் எப்பொழுதும் என்றென்றும் நமக்குள் உறைந்திருக்கும் இறைவனை உணர்ந்த ஒரு பக்தன், தான் உணவை உட்கொள்வதற்கு முன்னர் இறைவனுக்கு அன்போடு சம்ர்ப்பித்து விடுவான். ஏனென்றால் இறைவனை அவன் தன்னுடைய மிகவும் நெருங்கிய, மிகவும் முக்கியமான மற்றும் உயர்ந்த மதிப்புடைய உறவினராக நினைப்பதாலும் இறைவனுக்கு அனைத்திலும் முன்னுரிமை அளிப்பதாலும் உணவு மட்டுமின்றி அனைத்தையும் முதலில் இறைவனுக்கு நிவேதிக்கிறான்.

ஓர் உண்மையான இறைபக்தன் தினமும் மனம், வாக்கு, செயல் இவற்றினால் விளைகின்ற நன்மை தீமைகள் அனைத்தையும் இறைவனுக்குச் சமர்ப்பணம் செய்வான். தன் வாழ்வில் நிகழும் அனைத்திற்கும் அவன் இறைவனுக்கு முன்னுரிமை அளித்து, தன் கடமைகளைச் செய்வான். அவன் இறைவனின் அருளைப் பெறுவதற்காக தினமும் காத்திருப்பான். அவன் தன் வாழ்வில் ஒரு சிறு நன்மையாவது பிறருக்குச் செய்யவேண்டும் என்று நினைப்பான்; செய்வான். அவன் எப்பொழுதும் இறைவனுடனே, இறைவனுக்காகவே வாழ்ந்துகொண்டிருப்பான். இவ்வுலகில் அனைத்திற்கும் மேலான பொருள் 'இறைவன் மட்டும்'தான் என்பதை அவன் அறி வான். ஒரு பக்தனுக்கு உயர்உணர்வுநிலை வரும்பொழுது மட்டும்தான் 'அனைத்தும் இறைவன்; அனைத்துள்ளும் இறைவன்' என்ற மனப்பான்மை ஏற்படுகிறது. அதனால் அவனுடைய மிஞ்சியுள்ள ஆசை ஏதாவது இருந்தாலும் அதுவும் இறைவனுடன் ஒடுக்கமாகிவிடுகிறது. இந்நிலையிலான ஒரு பக்தன் பரிபூரணமாக இறைவனையேசார்ந்திருப்பான்.வெளிப்பார்வைக்கு மிகவும் சாதாரணமாக இருப்பான். அவனுடைய எண்ணங்களும் நினைவுகளும் எப்பொழுதும் இறைவனிடத்தில் சென்றுகொண்டேயிருக்கும். அப்படிப்பட்ட ஒரு பக்தன், "இறைவா! நான் உன்னை உள்ளார்ந்து நேசிக்கிறேன்; இன்றைய என்னுடைய மனநிலையில் இவ்வுலகில் எனக்கு வேறு யாரையும் தெரியாது! உன்னை மட்டும் தான் தெரியும்! என்னுடைய முழு உலகமும் நீயேதான்! உனக்காக மட்டும்தான் நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்" என்று எப்பொழுதும் அவன் இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்தவண்ணம் இருப்பான்.

இந்நிலையில் இறைவனும் அவனுக்கு ஆனந்தத்தை வெளிப்படுத்திக்கொண்டிருப்பான். அதனால் தனக்கு வரப்போகும் இறைவன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை எண்ணியவாறு மிகுந்த ஆனந்தத்துடன் அவனும் இருப்பான். அந்தப் பேரானந்தத்தில் அவன் மிதந்துகொண்டிருப்பான். இதற்கிடையில் அவனுக்குப் பிறரால் ஏதாவது இன்னல்கள் ஏற்பட்டாலும்கூட அவன் அவற் றை இன்னல்களாகக் கருதமாட்டான்.

தனக்கு யார் தொல்லை தந்தாலும் அவர்கள்மேல் அவன் அன்பைச் செலுத்தி நேசிப்பான். அவனுக்கு அவர்கள்மேல் அன்பு பெருகும். அதற்குமேல் இறைசகவாசத்தால் ஏற்படுகின்ற பேரானந்தப்பெருவெள்ளம் அவனைத் தழுவிக்கொண்டேயிருக்கும்.

அதே பேரானந்தத்தில் அவன் திளைத்துக்கொண்டேயிருப்பான். அவன் தன் இதயக் கோயிலில் இறைவனுக்காக ஓர் உயர்ந்த இடத்தை அளித்து, அன்பெனும் நீரினால் இறைவனின் பாதகமலங்களை கழுவி அவன்மீதான எண்ணங்களெனும் நறுமணமுடைய தெய்வீக மலர்களை தூவியவண்ணம் இருப்பான்.

பின்னர் இறைவனின் அருளாகின்ற ஒளிமழையில் குளித்தவாறு தன் ஆத்மாவாகின்ற புனித நதியை இறைவனாகின்ற மகாசமுத்திரத்தில் (பரம்பொருளுடன்) கற்பனையால் கலக்கிய வண்ணம் அவன் வாழுவான்.

அவ்வாறு அனைத்தும் இறைவன் அனைத்துள்ளும் இறைவன்இறைவன்தான் அனைத்திற்கும் கர்த்தாஇவ்வுலகில் நடக்கின்ற அனைத்திற்கும் காரணகர்த்தாஎன்றும் அவனையன்றி ஒரு நிமிடம் கூட வாழமுடியாது என்ற 'அவனு'க்கான தீவிர ஏக்கத்துடனும் அவனிடத்தில் பரிபூரண விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் வாழும் பக்தனுக்கு ஒரு நல்ல காலைப்பொழுதில் அவனுடைய ஆத்மாவை ஓம்காரஸ்வரூபனான, ப்ரணவஸ்வரூபனான பிரபஞ்ச நாயகனும் அனைவருக்கும் தந்தையுமான அன்பு இறைவன் தன்னுடன் இணைத்துக்கொள்வான்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

# நான் சொல்ற வழில போ!....

பெரியவாளை தரிசனம் செய்ய ஒரு தம்பதி வந்தார்கள். நல்ல வசதியானவர்கள்.

அவர்கள் பெரியவாளிடம் ஆசிர்வாதம் பெற தங்கள் முறை வந்த சமயம்.

"கார்லயா வந்தேள்?....."

"ஆமா...... பெரியவா"

"ட்ரைவர் வெச்சிண்டு வந்தியா? நீயே ஓட்டிண்டு வந்தியா?...."

"நாந்தான் ஓட்டிண்டு வந்தேன் பெரியவா......"

"எந்த வழியா வந்தே?....."

"காவேரிப்பாக்கம் வழியா வந்தோம்...."

"நீ.....திரும்பி போறச்சே....நா.... சொல்ற வழில போ!...."

"சரி..... பெரியவா..."

வழியை சொன்னார்.......

"அந்த வழில, அந்த கிராமத்தில, ஒரு பெரிய சிவன் கோவில் வரும்... அந்த கோவில் வாசல்ல, ஒரு வயதான தாத்தாவும் பாட்டியும் உட்காந்துண்டிருப்பா!.... நீ.... அவாளப் போயி பாரு! நா.... அனுப்பிச்சேன்னு சொல்லு! அதோட, முக்யமா.... அவா..... என்ன கேக்கறாளோ... அத... பண்ணிக் குடுப்பியா?...."

"காத்துண்டிருக்கோம் பெரியவா!......"

பிரகாசமான முகத்துடன் அவர்களுக்கு பிரசாதம் குடுத்தனுப்பினார் பெரியவா.

அவர்களும் பெரியவா சொன்ன வழியில், அந்த கிராமத்துக்கு சென்று சிவன் கோவிலையும் கண்டுபிடித்தார்கள்.

கோவில் வாசலில் இருந்த ஒரு சின்ன பெட்டிக் கடையில், மிகவும் ஏழைகள் என்று பார்த்தாலே சொல்லக்கூடிய ஒரு வயதான தம்பதி அமர்ந்திருந்தனர். சற்று தள்ளி வந்து நின்ற பெரிய காரிலிருந்து இறங்கிய தம்பதி, தங்களை நோக்கி வருவதைக் கண்டனர்.

"எங்களை.....பெரியவா அனுப்பினா......"

"என்னது? பெரியவாளா?......."

"பெரியவா!" என்ற தாரக நாமத்தை கேட்ட மாத்ரத்தில், வயதால் சுருங்கிய கண்களிலிருந்து கண்ணீர் 'குபுக்' கென்று வெளியே ஓடிவந்தது......

"பெரியவா.... ஒங்க ரெண்டு பேருக்கும் என்ன வேணுமோ..... அத.... என்னை பண்ணித் தர சொல்லிருக்கா...!

"ஆண்டவா!... எங்கியோ கெடக்கோம்...! ஆனாலும், எங்களோட தெய்வம் எங்களை பாத்துண்டே இருக்கே!..."

குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்தார் அந்த பெரியவர்.

"தயங்காம சொல்லுங்கோ.! ஒங்களுக்கு என்ன வேணும்?.... பணம்னா கூட, தயங்காம சொல்லுங்கோ!..."

"பணத்தை வெச்சிண்டு நாங்க என்ன பண்ணப் போறோம்? எங்களுக்கு இனிமே என்ன வேணும்? சாகறதுக்குள்ள, காசிக்கு மட்டும் ஒரேயொரு தடவை போகணும்! அங்க.... கங்கைல ஸ்நானம் பண்ணணும், கண்குளிர அந்த விசாலாக்ஷியையும், விஸ்வநாதரையும், அன்னபூரணியையும் தரிசனம் பண்ணணும்...... அவ்ளோதான்! எங்களால அங்கல்லாம் இந்த வயசான காலத்ல, சல்லிக்காசு இல்லாம, எப்டி போக முடியும்னு பெரியவாகிட்ட பொலம்பிண்டே இருந்தோம்! ப்ரத்யக்ஷ தெய்வம்!"

"ரொம்ப சந்தோஷம்! கவலையே படாதீங்கோ! நீங்க ரெண்டு பேரும், ஸௌகர்யமா காசிக்கு போறதுக்கும், அங்க... ஆசை தீர கங்கைல குளிக்கறதுக்கும், ஸ்வாமியை தரிசனம் பண்றதுக்கும், நா......ஏற்பாடெல்லாம் பண்ணிட்டு, ஒங்க ரெண்டு பேரோட ஆசையை நெறவேத்தி வெக்கறேன்..! பெரியவா அந்த பாக்யத்தை எனக்கு தந்ததுக்கு, பெரியவாளுக்கும், உங்களுக்கும் நமஸ்காரம் பண்ணிக்கறேன்....."

பணக்கார பக்தருக்கு, அவர்கள் கேட்ட யாத்ரை ஏற்பாடு பண்ணுவது என்பது, ஒரு பெரிய காரியமாக இல்லை. காசியில் எல்லா ஏற்பாடும் பண்ணிவிட்டு, தம்பதிகளையும் தகுந்த துணையோடு அனுப்பி வைத்தார்.

மோக்ஷபுரியான காசியில்........

ஸூர்யோதயம் ஆகும் ஸமயம், சுழித்துக் கொண்டு ஓடும் பவித்ர கங்கையில் அந்த ஏழை, முதிய தம்பதிகள், ஸங்கல்ப ஸ்நானம், பஞ்ச கங்கா ஸிராத்தம், தீர்த்த ஸிராத்தம், விசலாக்ஷி ஸமேத விஸ்வநாதர், அன்னபூரணி தர்ப்பணம், எல்லாவற்றையும், மிகுந்த மனநிறைவோடு, பெரியவாளை ஒவ்வொரு க்ஷணமும் ஸ்மரித்துக் கொண்டே, செய்து முடித்தார்கள். ஸௌகர்யமான ஜாகை, போஜனம், வண்டி எல்லாமே அழகாக ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது.

மறுநாள், கங்கையில் மூழ்கி ஸ்நானம் பண்ணும்போது, "கங்காதரனின் ஆக்ஞை யால், என்னைத் தேடி வந்த உங்களை, இனி என்றென்றும் என்னுடைய மடியிலேயே தாங்கிக் கொள்வேன்" என்று சொல்லாமல் சொல்லி, அன்பாக அரவணைத்து, தன் மோக்ஷப் ரவாஹத்தில் கலந்து கொண்டுவிட்டாள் அன்னை கங்கா தேவி!

அவர்களுடைய சரீரம் கூட கிடைக்கவில்லை!

காசியில் மரித்தால் மோக்ஷம்! பெரியவா இந்த ஏழைத் தம்பதிக்கு பண்ணிய ஸௌகர்யமான ஏற்பாடோ மோக்ஷ ஸாம்ராஜ்யம்! அதுவும்..... ஜோடியாக!

பெரியவா ஒவ்வொரு ஜீவனுக்கும் எங்கே, என்ன, எப்படி, முடிவு பண்ணியிருக்கிறார் என்பதுஅல்ப ஜீவன்களான நமக்கு என்ன தெரியும்? பெரியவா ஸ்மரணை ஒன்றே நமக்கு காசி, கங்கை, மோக்ஷம்!



www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

# சுற்றிவந்தால் சுகம்!



குந்தி, தன் மகன் கர்ணனை ஆற்றில் விட்டதால் ஏற்பட்ட பாவத்தை எண்ணி பயந்தாள். பாவம் தீர, தவ்டிய முனிவரிடம் பிராயச்சித்தம் கேட்டாள். மாசிமக நாளில் சிவனை வழிபட்டு, ஏழுகடலில் நீராடினால் பாவ நிவர்த்தியாகும் என்று அருள் செய்தார்.

தீர்த்தயாத்திரை புறப்பட்ட குந்தி, மாசி மகத்தன்று நல்லூர் கல்யாண சுந்தரேஸ்வரரை வழிபட்டு அங்குள்ள குளத்தில் நீராடினாள். சிவனருளால் ஏழுகடல் தீர்த்தமும் குளத்தில் சங்கமித்தன. எனவே அந்த குளத்துக்கு “சப்தசாகரம்‘ என பெயர் உண்டானது. 12 படித்துறைகளுடன் இக்குளம் உள்ளது. ஆரோக்கியம், ஐஸ்வர்யம் பெற விரும்புவோர் இந்த குளத்தை 12முறை வலம் வந்து வழிபடும் வழக்கம் உள்ளது. கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயிலான இங்குள்ள சிவலிங்கம், ஆறு நாழிகைக்கு ஒருமுறை நிறம் மாறும். தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசத்தில் இருந்து 5கி.மீ., தொலைவில் உள்ளது.

# துளையுள்ள ஒரே விதை





ருத்ராட்ச மரத்தின் விதைக்கு தனிச்சிறப்பு உண்டு. மற்ற விதைகளில் துவாரம் இருக்காது. துளசி அல்லது ஸ்படிக மணிகளை துளையிட்ட பிறகே கோர்க்க முடியும். ஆனால், இயற்கையிலேயே துளை உள்ளது ருத்ராட்சம். எல்லா மனிதர்களும் இதை எளிதாக அணிய வேண்டும் என்ற அடிப்படையில் இறைவன் இப்படி செய்திருக்கிறார். ஜாவா தீவு, நேபாளம், பெங்களூருவில் ருத்ராட்ச மரம் வளர்கிறது. இது வியாதியை போக்கும் தன்மை கொண்டது. ருத்ராட்சத்தை ஊற வைத்த நீரில் மஞ்சள்பொடி சேர்த்து குடித்தால் வாந்தி, இருமல் நீங்கும். உஷ்ணம் தணியும்.



விநாயகர், முருகன், அம்பிகை, பிரம்மா, விஷ்ணு, தேவர்கள் என்று அனைவரும் சிவபூஜை செய்து அருள்பெற்றுள்ளனர். ஆனால், சிவன் தன்னைத் தானே பூஜை செய்து வழிபட்ட தலமே, மதுரை இம்மையில் நன்மை தருவார் கோயிலாகும். மூலவர் லிங்கவடிவத்தில் இருக்கிறார். அவருக்கு பின்புறம் சிவபார்வதி சிலைகள் வடிக்கப்பட்டுள்ளது.சிவபெருமானே, மதுரையில் சுந்தரபாண்டியராக அரசாட்சி செய்கிறார்.

# சிவபூஜை செய்த சிவன்



பாண்டிய அரசர்கள் ஆட்சி பீடத்தில் அமரும்போது லிங்கபூஜை செய்வது மரபு. இதன் அடிப்படையில், மதுரையில் ஆட்சியில் அமர்ந்த சிவனும், தனது பட்டாபிஷேகத்தின் போது, தனக்குத்தானே பூஜை செய்து கொண்டாராம். அந்த அடிப்படையில், இவ்வாறு சந்நிதி எழுப்பப்பட்டுள்ளது. இதே போன்ற சந்நிதி வேதாரண்யத்திலும் உள்ளது.

# நினைத்தது நிறைவேற...

தேவதத்தன் என்ற கந்தர்வன், காட்டில் தவத்தில் ஆழ்ந்திருந்த துர்வாசரின் தவத்தைக் கலைத்தான். கண் விழித்த துர்வாசர், அவனை நாரையாகும்படி சபித்தார். நாரையாக உருமாறிய அவன், தன் பாவம் தீர, சிவபெருமானைச் சரணடைந்தான்.

சிவன் அந்த நாரையிடம், “”தினமும் காசி சென்று கங்கையில் நீராடி, தீர்த்தம் எடுத்து வந்து அபிஷேகம் செய்ய சுயரூபம் கிடைக்கும்,’’ என்று அருள்புரிந்தார். நாரையும் சிவனை பூஜித்து கந்தர்வனாக மாறியது. இந்த வரலாறு நடந்த சிவத்தலம் கடலூர் மாவட்டம் திருநாரையூர். இதே வரலாற்றின் அடிப்படையில் அமைந்த கோயில், சென்னை சைதாப்பேட்டை சவுந்தரேஸ்வரர் கோயில்.

இக்கோயில் 800 ஆண்டுகளுக்கு முந்தியது. “வடநாரையூர்’ என்று பெயர் பெற்ற இங்கு, வில்வம், வன்னி, சரக்கொன்றை ஆகியவை தலவிருட்சங்களாக உள்ளன. ஒன்பது வாரம் நெய்தீபம் ஏற்றி சைதாப்பேட்டை சவுந்தரேஸ்வரரையும், அம்பாள் திரிபுரசுந்தரியையும் வழிபட்டவர்களுக்கு நினைத்தது நிறைவேறும்.

தொகுப்பு: மூ.சக்திவேல்,
Cell:9787576858






ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033 / 07299992699

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033
7299992699 / 8939499598



# அனுக்கிரகம் என்றால் என்ன?

**சீடன்:** கடவுள் ஏன் உருவங்களை எடுத்தான்?

**ஞானி:** அளவில்லாத தத்துவத்தை அளவுடன் பார்த்தால்தான் மனிதனுக்குப் புரியும் என்பதால் உருவங்களைஎடுத்தான்.

**சீடன்:** அதனால் என்ன லாபம்?

**ஞானி:** பஞ்ச பூதத்தின் கலவையாக வந்தால் தான் மனிதனுக்குப் புரியும், பக்தி வரும்.

**சீடன்:** உருவ வழிபாடு இல்லை என்றால்?

**ஞானி:** பஞ்சபூத தத்துவங்கள் இருக்கும்போது பக்தி மார்க்கம் இல்லை.

**சீடன்:** அறிவு என்றால் என்ன?

**ஞானி:** சந்தேகம் வருகின்ற தெளிவுக்கு அறிவு என்று பெயர்.

**சீடன்:** உங்களை ஏன் கடவுன் அனுப்பினான்?

**ஞானி:** நீங்கள் 1991ல் என்னை வைத்துக் கடவுளை நம்ப வேண்டும் என்பதற்காக.

**சீடன்:** கடவுள் இல்லை என்ற எண்ணமும் உள்ளதே?

**ஞானி:** கடவுள் இல்லை என்பதில் மனிதன் தீர்மானமாக இருந்தால் கடவுள் சந்தோஷப்படுகிறான். கருத்துடன் வளருகின்ற மனிதன் சத்வ குணமுள்ள நல்ல மனிதனாகவே இருப்பான்.

**சீடன்:** அனுக்கிரகம் என்றால் என்ன?

**ஞானி:** ஆண்டவனுடைய அருள் எப்பொழுது வரும் என்பதை நம் மனதே சொல்லும். அது தான் அனுக்கிரகம் என்று பெயர்.

**சீடன்:** பக்தனுக்கு என்ன வேலை?

**ஞானி:** பக்தனுக்கு எப்பொழுதும் வேலை உண்டு, வேலையில்லா பக்த னுக்கு பிச்சைக்காரன் என்று பெயர்.

**சீடன்:** பக்தியில் நேர்மை அவசியமல்லவா?

**ஞானி:** நேர்மையும், கடவுளும் ஒன்றே. ஆனால் இது அறிவு பூர்வமாக உள்ளது. கடவுளை உணர்ந்து அது அனுபவமாக ஆனால் தான் அது புரியும்.

**சீடன்:** பக்தி என்றால் என்ன?

**ஞானி:** எதனால் கடவுள் நமக்குத் தெரியவில்லை என்று யோசித்தால் பக்தி.

**சீடன்:** இதில் ஞானிகளின் பணி என்ன?

**ஞானி:** எங்கோ உள்ள சூரியனை கண்ணாடியில் காட்டுவது போல் ஞானிகள் கண்ணுக்குத் தெரியாத கடவுளை தன்னிடம் காட்டு கிறார். அதனால் சாதகனின் ஆர்வம் அதிகரிக்கிறது

**சீடன்:** அனுஷ்டானம் என்றால் என்ன?

**ஞானி:** ஆண்டவன் நம்மை விரும்புகிறானா என்று பார்! அதுவே அனுஷ்டானம்.

ஆன்மிகமலர் மெயில் புக்

# பகவானைப் பிடிக்குமா?

பூஜையைப் பற்றி பல விளக்கங்கள் வருகின்றன. இந்த பூஜைக்கும் பல விளக்கங்கள் வருவதற்குக் காரணம் என்ன? பஞ்ச லோகத்திலே விக்ரகம் செய்து வைத்தால், அதை அபிஷேகம் செய்ய வேண்டும். ஏன்? இல்லையென்றால் அது கருத்துப் போய்விடும். அப்புறம் கொஞ்ச காலம் கழித்து, அந்த விக்கிரகத்தைக் கண்ணாலே பார்க்க முடியாது. ரொம்ப மதிப்பு உள்ளதை வாங்கி வைத்து இருக்கிறோம். மாதத்திற்கு ஒரு தடவை அபிஷேகம் – பௌர்ணமி, அம்பாளுக்கு மாதத்திற்கு ஒரு தடவை அபிஷேகம் பண்ணனும். அவள் சாந்தி அடைவாள் என்று சொன்னார். அப்படி நீங்கள் நினைத்தாவது அபிஷேகம் பண்ணுங்கள்; நல்லது! (காளி கோயிலில்) கல்லிலே விக்ரகம் வடித்து வைத்தால், அதையும் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை திறந்து அபிஷேகம் பண்ண வேண்டும். இல்லை என்றால், கல்லினால் செய்த சிலை மீது பாசி படிந்து விடும்.

‘பாசி’ என்ற செடி வளரும். அது தப்பு. நாம் எந்தக் கலையை வளர்த்தோமோ, அதை நாம் மறைக்க வேண்டாம். உலகத்திலே உள்ள ஏதாவது ஒரு மாயை, அதை மறைத்துவிடக்கூடாது. இது தான் ‘மாயை’ என்று பெயர். மாயை கடவுளையும் மறைத்தால், நமக்கு ஞானம் வராது. மாயை கடவுளை மறைத்தால் கடவுளை நமக்குத் தெரியாது. அவ்வளவு தான்.

பூலோகத்தில் கடவுள் நமக்கு தெரியாமல் போவதற்கு காரணம் என்னவென்றால், கடவுளை மாயை மறைத்து விட்டது. அதனால் தான் பிரும்மேந்திரர் சொன்னார் – “பகவானை மாயை மறைத்து விட்டது என்று யோசித்துப் பார்! அப்போதுதான், பகவான் மேல் பெரிய விருப்பம் வரும். பகவான் மேல் பெரிய விருப்பம் வருவதற்காகச் சொல்கிறேன்”.

உலகத்தில் பல மகான்கள். அந்த மகான்கள் எல்லாம் எதுபோல சந்தோஷப்படுகிறார்கள் என்றால் – “நான் தெரிந்தது எல்லாம் சொல்லும் போது, அவர்களுக்கு எல்லாமே தெரிந்து விடுகிறது அவருக்கு, உங்களுக்கு ஏதாவது தெரிகிறதா?” ‘பகவானைத் தெரிந்து கொண்டவர்களை எனக்கு வரிசை வரிசையாய் தெரிகிறது’ – சதாசிவ பிரும்மேந்திரர்.

அதுதான் அடக்கம். ‘சதாசிவா! நீ அடக்கத்தைத் தான் எப்போதும் விரும்புகிறாயா?’ ‘அடக்கம் என்றால் என்ன?’ பணிவாக இருக்கிறதை நான் விரும்புகின்றேன் என்றார் அவர். பிரும்மேந்திரர் ரொம்ப கெட்டிக்காரர்.

(24–08–2008 ஞாயிறு
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விவரங்களுக்கு
தொடர்பு கொள்ள:
போன்: 098840 13113
098410 28028)



ஆன்மிகமலர் மெயில் புக்

# “ஆ(ம)ஹா பாரதம்”

## பாகம் 12

ஒரு நாள் கத்ருவும், வினதாவும் வெளியில் உலவச் சென்றிருந்தனர். அப்போது பாற்கடல் கடையும் போது தோன்றிய பலம் மிகுந்த உச்சைச்ரவா எனும் குதிரைஅருகில் செல்வதைக் கண்டனர். அழகானதும், நல்ல லக்ஷணங்கள் உடையதும் கட்டுமஸ்தான உடலோடு கூடியதும் தேவரின் புகழுக்குப் பாத்திரமானதாக இருந்தது.

இடையில் சௌனகர் சூதரிடம் “தேவர்கள் எதற்காக எந்த இடத்தில் அந்த குதிரை தோன்றிய கடலைக் கடைந்தனர்” எனக் கேட்டதும் சூதர் திருப்பாற்கடல் கடைந்த வைபவத்தை எடுத்துக் கூறுகிறார்.

மிகப் பெருமை வாய்ந்த பொன் போன்று ஜொலிப்பதுமாக இருந்தது அந்த மேருமலை. சூரியக் கிரணத்தைக் காட்டிலும் ஒளி வீசக்கூடிய அம்மலை மீது தேவரும், கந்தர்வரும் வாழ்கின்றனர். பாவம் நிறைந்தவர்கள் அங்கு செல்ல முடியாது.



அரிய வகை மூலிகைகளோடும், நதிகளும், மரங்களும், பறவைகளும் பாம்புகளும் கொண்ட அம்மலை மீது ரத்தினங்கள் சிதறிக் கிடக்கின்றன. அதிகமான பரப்பளவு கொண்டதாகவும் விளங்கியது அம்மலை.

அம்மலையில் அமுதம் பெறுவதைப் பற்றிய ஆலோசனையில் அசுரரும் ஒன்று சேர்ந்து கடலைக் கடைந்தால் பொன்னும், பொருளும், அரிய வகை மருந்துகளையும் பெறலாம். மேலும் தொடர்ந்து கடைந்தால் அமுதம் பெறலாம் என்று கூறினார்.

உடனடியாக அதற்குரிய பணிகளைச் செய்யத் துவங்கினர்.

முதலாவதாக கடலை கடையும் பொருட்டு மந்திரமலையை பெயர்த்து வரச் சென்று தேவரால்பெயர்க்க முடியாமல் போனதால் அவர்கள் பிரம்மாவையும், விஷ்ணுவையும் சரணடைகிறார்கள்.

ஸ்ரீமந் நாராயணன் அனந்தனுக்கு ஆணையிட பிரம்மாவின் தூண்டுதலும் உடன் சேர அனந்தனான ஆதிசேஷன் மிகுந்த முயற்சியோடு வனவாசிகளின் உதவியோடும் அம்மலையைப் பெயர்த்து எடுத்து விட்டார். தேவர்கள் அம்மலையைக் கடற்கரைக்கு கொண்டு சென்று கடலரசனிடம் மலையால் உன்னைக் கடையப் போகிறோம் என்றனர். எனக்கும் அமுதம் உண்டு என்றால் நான் வேதனையைப் பொறுத்துக் கொள்கிறேன் என்றான் கடலரசன்.

அதன் பிறகு தேவர்கள் கச்யப ராஜனிடம் நீங்கள் மந்திரமலைக்கு ஆதாரமாக வேண்டும் என்று கேட்க அவரும் தன் முதுகை மலைக்குக் கீழே கொடுத்தார்.

(விஷ்ணு புராணத்தில் மகா விஷ்ணுவே கூர்ம அவதாரம் எடுத்து மலையைத் தாங்கிப் பிடித்தார் என்று வரும், அதே சமயம் அதிலேயே மகா விஷ்ணு ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு ரூபம் எடுத்து அந்தந்த வேலைகளை செய்து முடித்தார் என்றும் வருவதைப் பார்த்தால் இங்கு எந்த சந்தேகமும் வராது.) இங்கு கச்யப ராஜன் என்று வருவதை அப்படியாக கொண்டு விடவும்.

புராணங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமாக வரும் சம்பவங்களை மனதில் நிறுத்திக் குழப்பிக் கொள்ளக் கூடாது. அந்தந்தப் புராணங்களில் அந்தந்த மூர்த்தியின் ஏற்றத்தைப் பற்றிக் கூறும். புராணங்கள் அனைத்தையும் படித்தாலன்றி இந்த குழப்பங்கள் தீராது.

இந்திரன் மலையை வஜ்ஜிரத்தால் அழுத்திக் கொண்டார். வாசுகி நாகத்தைக் கயிறாக செய்துக்கொண்டு சமுத்திரத்தை கடையத் துவங்கினர். அசுரர்கள் வாய்பகுதியைப் பிடித்துக் கொண்டனர். தேவர்கள் வால் பகுதியைப் பிடித்துக் கொண்டனர்.

ஸ்ரீ மந் நாராயணன் அருகிலிருந்த அனந்தன் வாசுகியின் தலையை அடிக்கடி மேலேத் தூக்கி உதறித் தள்ளினார். அப்போது வாசுகியின் வாயிலிருந்து புகையும் தீ ஜுவாலையும் கலந்த உஷ்ணப் பெருமூச்சாக வெளிவரத் துவங்கின. அந்த உஷ்ணப் புகையானது மின்னல்களோடு மேகங்களாகி தேவர்கள் மீது மழையைப் பொழிந்தன.. மறு முனையிலிருந்தவர்கள் மீது பூ மழைப் பொழிந்தன.

மந்திரமலை கடைந்ததால் நீரில் வாழும் பல விதமான உயிரினங்கள் அதில் அரைப்பட்டு உயிரிழந்தன. சுழற்றப்பட்ட மலையின் சிகரத்திலிருந்த மரங்கள் ஒன்றையொன்று மோதிக் கொண்டு அதில் வாழ்ந்து வந்த பறவைகளோடு கடலில் வந்து வீழ்ந்தன. மரங்கள் மோதியதில் தீ உருவாகி அதிலிருந்து புகைத் தோன்றி மந்திர மலையையே மூடிவிட்டன. தீயினால் ஆயிரக்கணக்கான





அதன்பின் அனைத்து விருப்பங்களை நிறைவேற்றும் பாரிஜாத மரமும், சுரபி எனும் பசுவும் தோன்றின. இதன் பிறகு அற்புதத் திருமேனியோடு தன்வந்திரி பகவான் தோன்றினார்.

தன் கரங்களில் வெண்மையான அமுதக் கலசம் ஏந்தியிருந்தார். அதுவரை அமைதியாய் காத்திருந்த இரு தரப்பினரிடத்திலும் குழப்பம் உண்டாகத் துவங்கின.

மேலும் வெண்மை நிறத்தோடும் நான்கு தந்தங்களோடும் ஐராவதம் எனும் யானைத் தோன்றியது.இந்திரன் அதை பெற்றுக் கொண்டு விட்டான்.

முன்பை விட வேகமாகக் கடையத் துவங்கியதும் அதிலிருந்து கால கூட விஷம் தோன்றிப்புகையோடு தீயாக உலகனைத்தையும் சூழ்ந்துக் கொண்டு எரிக்கத் துவங்கியது. அனைவரும் மூர்ச்சையானார்கள்.

அப்போது பிரும்மா சிவபெருமானை வேண்டிக் கொள்ள சிவபெருமான் அதையே அம்ருதமாக எண்ணிக் குடித்து விட்டார். அதை உள் இறங்க விடாமல் கண்டத்திலேயே (கழுத்தில்) நிறுத்திக் கொண்டு விட்டார். இதனாலேயே சிவபெருமான் நீலகண்டன் என்று அழைக்கப்பட்டார்.

இவைகளை பார்த்துக் கொண்டிருந்த தானவர் அவநம்பிக்கை கொண்டு அமுதத்திற்காகவும். லக்ஷ்மிக்காகவும் தேவர்களோடு விரோதம் கொண்டனர்.

பகவான் மகாவிஷ்ணு தன் மாயையால் அனைவரும் மோஹம் கொள்ளும்படியாக மோஹினி உருவெடுத்து வந்து அசுரர்களை மயங்கச் செய்து அமுதத்தை தானே பரி மாறப்போவதாக சொல்லி முழுவதையும் தேவர்களுக்கே அளித்து விட்டார். இதனால் பெரும் குழப்பம் ஏற்பட்டு அசுரர்கள் தேவர்கள் மீது படையெடுக்கத் தலைப்பட்டார்கள்.

அடுத்த இதழில்....

- **Thali**, Ph:09786223577

உயிரினங்கள் தங்கள் உயிரை இழந்தன்.

மரங்களிலிருந்து கோந்து வடிவில் பல விதமான மருந்துகள் அமுதத்திற்கு ஈடாக பொழியத் துவங்கின. ரத்தினங்களின் மணியிலிருந்தும் ரஸங்கள் ஒழுகி தேவர்கள் பெருவாழ்வு வாழ வழிவகுத்தது. அந்த ரஸங்களின் கூட்டுக் கலவையால் பாலாகி, பாலும் நெய்யாகிவிட்டது.

ஸ்ரீமந் நாராயணனைத் தவிர தேவாசுரர்கள் அனைவரும் களைத்தே விட்டனர். அமுதம் கிடைக்காததால் இருபாலரும் சலிப் படைந்து பிரும்மாவிடம் முறையிட்டனர். பிரும் மாவானவர்

ஸ்ரீமந் நாராயணனிடம் ப்ரபோ! களைப் பினால் பலமிழந்து இருக்கும் இவர்களுக்கு பலம் அருளும் என்று வேண்டிக் கொண்டார்.

ஸ்ரீவிஷ்ணு உடனே இந்தச் செயலில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் நான் பலத்தை அளிக்கிறேன். சக்தியைப் பெற்று மீண்டும் எல்லோரும் முன்பு போல் கடலை கடையட்டும் என்று சொல்லி தன்னருளால் எல்லோரையும் பலம் பெறச் செய்தார்.

தேவ தானவர் மீண்டும் கடலைக் கடைய குளிர்ந்த ஒளியுடன் வெண்மை நிறத்தோடு சந்திரன் தோன்றினான்.பின் வெண்மையான வஸ்திரம் அணிந்த லஷ்மீதேவி தோன்றினார். பிறகு சுரா தேவியும், வெண்குதிரையும், கௌஸ்துப மணியும் தோன்றின. கௌஸ்துப மணியை பகவான் தன் திருமார்பில் அணிந் துக் கொண்டார்.






# வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

**(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)**

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

**தொடர்பு கொள்ளவும்:**

**ஆசிரியர்: நாகராஜன்**

**16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்**

**பொன்மணிமாளிகை அருகில்,**

**சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா**

**தொலைபேசி 7299992699/ 8939499598**

# பக்குவமற்றவனுக்கு நாத்திகம், அராஜகம் போன்றவை

## குஷியான தத்துவங்களாகும்

கல்லூரியில் படிக்கும்போது, ஒரு இளை ஞனுக்கு எல்லாமே வேடிக்கையாகத் தெரிகிறது.

கல்யாணமாகிக் குழந்தை குட்டிகளோடு அவன் வாழ்க்கை நடத்தும்போது, ஒவ்வொரு வேடிக்கைக்குள்ளும் வேதனை இருப்பது அவ னுக்குப் புரிகிறது.

இளமைக் காலத்து ஆரவாரம், முதுமை அடைய அடையக் குறைந்து வருகிறது. ஒவ் வொரு துறையிலும், நிதானம் வருகிறது.

இளம் பருவத்தில் இறைவனைப்பற்றிய சிந்தனை அர்த்த புஷ்டியற்றதாகத் தோன்றும்.

வாழ்வில் அடிபட்டு வெந்து, நொந்து ஆண்டவனைச் சரணடைய வரும்போது, அவனது மாபெரும் இயக்கம் ஒன்று பூமியில் நடைபெறுவது புத்தியில் படும்.

பக்குவமற்றவனுக்கு நாத்திகம், அராஜகம் எல்லாமே குஷியான தத்துவங்கள்.

பக்குவம் வர வர, ரத்தம் வற்ற வற்ற இந்தத் தத்துவங்கள் எல்லாம் மறுபரிசீலனைக்கு வரும்.

நடைமுறைக்கு ஒத்த சிந்தனை, பக்குவப்பட்ட பிறகே தோன்றும். இருபது வயது இளைஞனைப் பெண் பார்க்கச் சொன்னால் எல்லாப் பெண்களுமே அவன் கண்களுக்கு அழகாய்த்தான் தெரிவார்கள்.

நாற்பது வயதிற்கு மேலேதான், நல்ல பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் தெளிவு அவனுக்கு வரும்.

கல்லூரி மாணவனைப் படிக்கச் சொன்னால் காதல் கதையையும், மர்மக் கதையையும் படிப்பதில்தான் அவன் கவனம் செலுத்துவான்.

காதலித்துத் தோற்றபின்தான், அவனுக்குப் பகவத் கீதையைப் படிக்கும் எண்ணம் வரும். விளையாட்டுத்தனமான மனோபாவம் பிடிவாதத்திற்குப் பெயர் போனது. எதையும் சுலபத்தில் ஏற்றுக்கொண்டு `அதைவிட உலகமே கிடையாது' என்று வாதாடும். எதிர்த்தால் வேரோடு பிடுங்க முயலும்.

பக்குவமற்ற நிலை என்பது இரண்டு `எக்ஸ்ட்ரீம்' நிலை. ஒன்று, இந்த மூலையில் நின்று குதிக்கும், அல்லது அந்த மூலையில் இருந்து குதிக்கும். பக்குவ நிலைக்குப் பெயரே நடு நிலை.

மேலை நாட்டில் ஒரு பழமொழி உண்டு.

`இருபது வயதிற்குள் ஒருவன் கம்யூனிஸ்ட் ஆகவில்லை என்றால் அவன் அப்பாவி; முப்பது வயதிற்கு மேலும் அவன் கம்யூனிஸ்டாக இருந்தால் அவன் மடையன்!' இதுதான் அந்தப் பழமொழி.

பரபரப்பான பருவ காலத்தில் கோயிலுக்குப் போனால் தெய்வம் தெரியாது என்பது மட்டுமல்ல, அங்கே சிலையில் இருக்கும் அழகுகூடத்தெரியாது.

ஐம்பது வயதில் கோயி லுக்குப் போனால், சிலை யில் இருக்கும் ஜீவனும் தெரியும்.

இதில் வெறும் பருவங் களின் வித்தியாசம் மட்டுமில்லை. பக்குவத்தின் பரிணாம வளர்ச் சியும் அடங்கியிருக்கிறது. ஏன், உடம்பேகூட இருபது வயதில் எந்த உணவையும் ஜீரணிக்கிறது. நாற்பதிற்கு மேலேதானே `இது வாய்வு', `இது பித்தம்', என்கிற புத்தி வருகிறது.

`டென்ஷன்' என்ற ஆங்கில வார்த்தைக்குச் சரியானதமிழ் வார்த்தை எனக்குப் புரியவில்லை. "முறுக்கான நிலை" என்று அதைக் கூறலாம். அந்த நிலையில் `எதையும் செய்யலாம், எப்படியும் செய்யலாம்' என்கிற `திமிர்' வருகிறது. அதில் நன்கு அனுபவப்பட்ட பிறகு, `இதைத்தான் செய்யலாம்', `இப் படித்தான் செய்யலாம்' என்ற புத்தி வருகிறது.

இனி விஷயத்திற்கு வருகிறேன்.

`ஞான மார்க்கப் பக்குவமும் அப்படிப்பட்டது தான்' என்பதைக் கூறவே இவற்றைக் கூறினேன்.

உள்ளம் உடலுக்குத் தாவி, உடல் ஆன்மாவுக்குத் தாவிய நிலையே, பக்குவப்பட்ட நிலை. தேளைப் பிடிக்கப் போகும் குழந்தை, அதையே அடிக்கப் போகும் மனிதனாக வளர்ச்சியடைகிறது.

அதற்குப் பிறகு, அந்தத் தேளிடமேகூட அனுதாபம் காட்டும் ஞானியாக அந்த மனிதன் மாறி விடுகிறான்.

**பக்குவமற்றவனுக்கு நாத்திகம், அராஜகம் எல்லாமே குஷியான தத்துவங்கள். பக்குவம் வர வர, ரத்தம் வற்ற வற்ற இந்தத் தத்துவங்கள் எல்லாம் மறுபரிசீலனைக்கு வரும்.**




அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# ஆயிரம் கருத்துபொதிந்த பட்டினத்தார் பாடல்



மெய்யடியார்களுக்காக பட்டினத்தார் அருளிய ஒரு பாடல் மற்றும் அதன் பொருள் விளக்கமும்.

1. பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும்.
2. தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும்.
3. பெருத்தன சிறுக்கும்; சிறுத்தன பெருக்கும்.
4. உணர்ந்தன மறக்கும்; மறந்தன உணரும்.
5. புணர்ந்தன பிரியும்; பிரிந்தன புணரும்.
6. உவப்பன வெறுப்பாம்; வெறுப்பன உவப்பாம்

### 1. பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும்.

**பொருள் விளக்கம்:**

உலகம் என்பது நிலையில்லாதது. நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருப்பது. அதில் வாழும் உயிர்களும் பரிணாம மாற்றத்திற்குட்பட்டு இறந்தும் பிறந்துமாய் உலகில் சம நிலையை உண்டாக்கிக்கொண்டு வரும். எந்த உயிருக்கும் நித்தியத்துவம் என்பது இல்லை. பிறக்கும் எல்லா உயிரும் ஒரு நாள் இறந்தே ஆகவேண்டும். இந்த நியதியிலிருந்து எந்த உயிரும் தப்ப முடியாது. சரி பிறந்தன இறந்துவிட்டால் அந்த உயிர் முறுப்புள்ளியாகிவிட்டதா என்றால் அதுதான் இல்லை. அப்படிப் பிறந்து இறந்த உயிர் தனது பாவ புண்ணியங்களுக்கு (நன்மை, இன்பம்) ,தீமை (துன்பம்) ஏற்ப மறுபடியும் ஜனன மீண்டும் பிறப்பு) மெடுக்கும். இதுதான் முதற் பழமொழியின் பொருள்.

### 2. தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும்.

**பொருள் விளக்கம்:**

உலகின் எல்லா நிகழ்ச்சிகளும் தோற்றம் மறைவு உடையவை. காலையில் தோன்றும் ஆதவன் மாலையில் மறைகிறான். அப்படியானால் மறையும் சூரியன் மறு நாள் உதயமாகும். இஃது சூரிய சந்திரர்களுக்கு மட்டுமல்ல , உலகில் உள்ள எல்லா உலக இயக்கங்களுக்கும் பொருந்தும்.

### 3. பெருத்தன சிறுக்கும்; சிறுத்தன பெருக்கும்.

**பொருள் விளக்கம்:**

சந்திரோதயம் ( சந்திரன்) பூரண நிலவவாய் ( முழு பௌர்ணமி ஆக) காணப்பட்டாலும் அடுத்த நாள் முதற் கொண்டு தேய்பிறையாய்ச் சிறுத்துக் கொண்டே வந்து முடிவில் அமாவாசையாக ஒன்றுமில்லாமல் காட்சிதரும். அந்த அமாவாசை நிலவு பிறகு சிறிது சிறிதாக வளர்ந்து வளர் பிறை பூரணச் சந்திரனாக காட்சியளிகும். நிலவு தேய்வதும் வளர்வதும் இயற்கை நிகழ்வுகள்.

### 4. உணர்ந்தன மறக்கும்; மறந்தன உணரும்.

**பொருள் விளக்கம்:**

மனிதனுக்கு மட்டும் மறக்கும் ஆற்றல் இல்லலாதிருப்பின் அவன் இந்நேரம் பைத்தியம் பிடித்ததல்லவா அலைந்திருப்பான். எத்தனை சம்பவங்களைத் தான் அவன் நினைவு கொண்டிருப்பது. சிறு வயது சம்பவங்கள் வயது ஆக ஆகச் சிறுகச் சிறுக மறந்துகொண்டே வர சில முக்கிய சம்பவங்கள் மட்டுமே கல்லின் மேல் எழுத்தாக நிலைத்து நிற்கின்றன. உணர்ந்தவை எல்லாம் வயதாக வயதாக மறந்து கொண்டே வரும். அப்படி மறந்த சம்பவங்கள் சில எதிர்பாரத நிலையில் திடீரென்று நினைவுக்கு வருதலும் உண்டு.

### 5. புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும்.

**பொருள் விளக்கம்:**

ஒரு தந்தையும் தாயும் புணர்ந்து ஒரு குழந்தை உருவாகிறது. அந்த தந்தை தாயிடம் இருந்து பிரிந்து சென்ற குழந்தையும் வயதானபின் புணர ஆரம்பிக்கும். இது ஒரு வட்டச் சுழற்சி.

### 6. உவப்பன வெறுப்பாம், வெறுப்பன உவப்பாம்.

**பொருள் விளக்கம்:**

விரும்பிப் போனால் விலகிப் போகும்.

விலகிப் போனால் விரும்பி வரும் என்ற முது மொழி இப்படி உருமாறி நிற்கின்றது. பட்டினத்தார் இந்த ஆறு பழமொழிகளையும் கோயில் திருவகவலில் மனதிற்கு உபதேசமாகச் சொல்கிறார்.

சும்மா இரு மனமே என்ற வார்த்தைக்கு சிவனென்றிரு மனமே என்று பொருள்.

ஆகவே பட்டினத்தார் மெய்யடியார்கள் மனதிற்கு உபதேசமாக இந்த பாடலையும்,அதன் உட்கருத்து பொருளையும் நமக்கு கொடையாக தந்துள்ளார் இதைப் பின்பற்றி நாமும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வைப்போம் என்று மனம்,மொழி,மெய்களால்,வாழ்த்தி வணங்கு வதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன்.

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

# என்னை ஆட்சி செய்வது நான் அல்ல

# கிருஷ்ணன் என்பதை உணரும் போது ஞானம் வருகிறது

அர்ஜுனன்! மனிதன் காண்டிபம் ஏந்தி அம்புதரித்து காண்கின்ற பொருளை எல்லாம் கணநேரத்தில் அறுத்து போடும் திறம் படைத்தவனாக இருந்தாலும், அரசியல் சதுரங்கத்தில் உருட்டப்படும் காய்களை இன்ன நேரத்தில் வெட்ட வேண்டும், இன்ன நேரத்தில் சேர்க்க வேண்டும் என்று முற்றிலும் அறிந்த ராஜதந்திரியாக இருந்தாலும், மன்மதனை போன்ற அழகும், மனதை மயக்கும் கலைத்திறமை பெற்றவனாக இருந்தாலும், உலகத்தையே படைத்த வாசுதேவ கிருஷ்ணனை தனது உற்ற நண்பனாக உறவினனாக பெற்றிருந்தாலும் கூட அர்ஜுனன் உன்னையும், என்னையும் போல சாதாரண மனிதனே.

எதற்காக அப்படி சொல்கிறேன் என்றால் பாரத யுத்தத்திற்கு முன்னால் அவன் எத்தனையோ போர்க்களங்களை கண்டவன். அவற்றில் இறங்கி செயலாற்றியவன். தென்னங்குலைகளை வெட்டி வீசுவதை போல ஆயிரம் ஆயிரம் மனித தலைகளை வெட்டி வீசியவன். இரத்த குளத்தில் நீச்சல் அடித்தவன் அடுக்கடுக்காக விழுகின்ற பிணங்களின் மீது நின்று மோதும் எதிரிகளை சடலங்களாக்கியவன். அந்த போரின் போதெல்லாம் அவன் உள்ளம் நடுங்கவில்லை. உதிரம் கொதிக்கவில்லை. ஐயோ நாம் கொல்வது அவன் உயிர்களை. அந்த உயிர்களுக்கும் அன்னை உண்டு. அருமை மனைவி உண்டு பாச குழந்தைகள் உண்டு என்று எண்ணி பார்க்கவில்லை. ஆனால் பாரத போரில் தன் முன்னே நிற்கும் விரோதிகளை நிமிர்ந்து பார்கிறான் அப்போது அவனுக்கு புதியதாக ஞானம் பிறக்கிறது. இவர்களை கொன்று பூமியை ஆள்வதை விட பிச்சை எடுத்து உண்பதே சிறந்த வாழ்க்கை என்று தத்துவம் பேசுகிறான் இந்த தத்துவம் எதிலிருந்து பிறந்தது?



மற்ற போர்களில் அர்ஜுனனால் அழிக்கப்பட்டது அவனுக்கு சம்மந்தம் இல்லாத மனிதர்கள் அவர்களின் முகவரி கூட இவனுக்கு தெரியாது. இவனை பொறுத்தவரை அவர்கள் வைத்த குறிக்கு பலியாகும் இலக்குகள் அவ்வளவு தான் ஆனால் பாரத போரில் நிற்பவர்கள் இவனது சொந்த பந்தங்கள் சுய இரத்தங்கள் மாமனும் மைத்துனனுமாய் உறவாடி கலந்த உறவினர்கள் பாசத்தையும் நேசத்தையும் படைக்கலங்களையும் சொத்து சுகங்களையும் பகிர்ந்து கொள்ளும் பங்காளிகள். இவர்களை கொன்றால் இவனுக்கு வலிக்கும். சொந்த இரத்தங்களையே பெருகி ஓட செய்த பெரும் பாவி என்று ஒருவேளை உலகம் இவனை தூசிக்கவும் கூடும். இதனால் இவனுக்கு இரத்தம் கொதித்தது. பாசம் தடுத்தது யுத்தம் செய்ய மாட்டேன் என்ற தந்திரமான ஞானம் பிறந்தது எவ்வளவு சுயநலம் பாருங்கள்.

நாமும் கூட அப்படிதான் பசிக்கு அழுவது நம்வீட்டு குழந்தையாக இருந்தால் பிச்சை எடுக்கவும் தயங்க மாட்டோம் அடுத்த வீட்டு குழந்தை பசியால் கையேந்தினால் அதை பார்த்து ஏளனம் செய்வோம். துன்பமும் துயரமும் நமக்கு இல்லை எனும் போது கடமையை பற்றி வாய் கிழிய பேசுவோம். நமக்கே வந்துவிட்டால் அகிம்சையின் சிகரம் நானே என்பது போல அழுது புலம்புவோம் மனிதர்களின் இந்த பசப்பு மந்திரத்தை நன்றாக அறிந்தவன் கிருஷ்ணன். அதனால் தான் புலம்புவதை விட்டு விட்டு கடமையை செய்ய எழுந்திரு என்று பார்த்தனை இடிக்கிறான். அவனது போலி வேதாந்தங்களை எதார்த்தமான தத்துவங்களால் தோலுரித்து காட்டுகிறான். உண்மையான இறக்கம் எது? போலியான கருணை எது? என்பதை சித்திரத்தில் தீட்டி ஊர் உலகம் அறிய பொது இடத்தில் வைக்கிறான். கண்ணனுக்கு எதன் மீதும் பற்றுதல் இல்லை. வெறுப்பும்





ஆன்மிகமலர் மெயில் புக்

இல்லை அதனால் தான் அவனால் உள்ளதை உள்ளபடி சொல்ல முடிகிறது. கிருஷ்ணனுக்கும் மனிதனுக்கும் விருப்பு வெறுப்புகளில் மட்டுமா வேற்றுமை இருக்கிறது? இன்னும் எத்தனையோ விஷயங்களில் இருக்கிறது.




மனிதனது ஆத்மா மட்டும் பல பிறவிகள் எடுப்பது கிடையாது. நேற்று ஒரு பிறவி இன்று மறுபிறவி என்று மனிதன் மட்டும் தொடர் பிறவிகளை சந்திப்பவன் இல்லை மனிதனை படைத்த மனிதனை காக்கும் பரமாத்மா கூட பல பிறவிகள் எடுக்கிறார். பலமுறை மனித சமூகத்திற்காக பூமிக்கு வந்து செல்கிறார். தான் வந்து செல்லும் நோக்கமும் லட்சியமும் எத்தனைமுறை வந்தோம் இன்னும் எத்தனை முறை வருவோம் என்ற ஞானம் கிருஷ்ணனுக்கு உண்டு. அர்ஜுனனுக்கும் நமக்கும் அது கிடையாது. கிருஷ்ணன் பிறப்பு இறப்பு இல்லாத ஈஸ்வரனாக இருந்தாலும் கூட இயற்கையை தன்வசப்படுத்தி தனக்கே உரிய பிரத்யேக மாயா சக்தியால் பூமியில் அவதரிக்கிறார். தனது அவதாரத்தின் மூலமாக பூமியை அலங்கரிக்கவும் செய்கிறார்.

கிருஷ்ணன் பூமிக்கு எப்போதெல்லாம் வருகிறானோ அப்போதெல்லாம் நல்லவர்களும் நல்லதும் பாதுகாக்கப்படுகிறது கேட்டவர்களும், கேடுகளும் இல்லாமல் போகிறது. தர்மத்தை நிலைநாட்ட வாசுதேவ கிருஷ்ணன் யுகம் தோறும் வருகை தருகிறான்.அந்த யுக புருஷனின் பெருமையை அறிந்தவர்கள் மீண்டும் மீண்டும் பிறவி ஈடுக்க வேண்டுமென்ற தண்டனை சுவர்களை தகர்த்தெறிந்து விட்டு கிருஷ்ணனின் தாமரை பாதங்களை அனுதினமும் தழுவுகின்ற பெரும்பேறு அடைகிறார்கள். கரையான்களை போல மனதை அரித்து கொண்டிருக்கின்ற ஆசைகளை நெருப்பு வைத்து கொளுத்தி வாழ்க்கையில் பாரமாக பழுவாக சுத்தி வளைத்து கொண்டிருக்கின்ற அச்சம் என்ற நாகத்தை இரண்டாக பிளந்து படுபாதாளத்தில் கொண்டு தள்ளுகின்ற சினத்தை சிறைச்சாலைக்கு அனுப்பி விட்டு கண்ணனே கதி என்று தவத்தால் புனிதமடைந்து ஞானத்தால் தெளிவடைந்து தியாகத்தால் சுத்தமடைந்து அவனோடு முழுவதும் ஐக்கியமாகி விடுகிறார்கள்.

பாலைவனத்தில் தாகத்திற்கு தண்ணீரின்றி வாட்டும் குளிருக்கு தப்பித்துகொள்ள கூடாரமின்றி அல்லா என்று நீ ஆர்ப்பரித்து அழைத்தாலும் மது மயக்கமும் மங்கையரின் மோகமும் சூதாட்ட சூழ்ச்சிகளும் உன்னை வாட்டி நெருக்கும் போது ஏசுவே என்று நீ கூவினாலும் துப்பாக்கிகளின் ஓசை உன் செவிப்பறையை கிழிக்கும் போது அரசியல் சதுரங்கம் அடிமையாக உன்னை தள்ளும் போது உரிமை இழந்து அதிகார சாட்டைகளால் அடிபட்டு நீ வீழ்ந்த போதும் புத்தம் சரணம் கச்சாமி என்று ஈன குரலில் நீ முணுமுணுத்தாலும் அங்கே புல்லாங்குழலோடு மயில் பீலி அசைந்தாட நீல வண்ண கண்ணன் வந்து நிற்பான் உன் கண்களில் வழிந்தோடும் கண்ணீரை தனது பிஞ்சு கரங்களால் துடைப்பான். அதனால் தான் கண்ணன் நீ என்னை எப்படி அழைத்தாலும் அப்படி வருவேன் எப்படி விரும்பினாலும் அப் படியே தெரிவேன் என்று கீதையில் சொல்கிறான்.

கண்களால் காணுகிற பார்க்க முடியாத அனைத்தையும் படைத்தவன் கிருஷ்ணன் ஒரு நிமிட நேரம் கூட ஓய்வே இல்லாமல் செயல்புரிந்து கொண்டிருப்பவன் கிருஷ்ணன் ஆனால் அவனை எந்த கர்மங்களும் தீண்டுவது கிடையாது. காரணம் அவன் எந்த செயல்மீதும் பற்றுகொண்டு செய்வது இல்லை. ஒரு சின்ன குழந்தை மணல் வீடு கட்டி விளையாடுவது போல அவன் செயல்புரிந்து கொண்டிருக்கிறான். கர்மங்களை தர்மங்களாக அவன் செய்தாலும் கர்மத்தலை அவனை ஒட்டுவது இல்லை என்பதை விட அவனையே பற்றி கொண்டிருக்கின்ற ஞானிகளுக்கும் கர்ம வினை என்று எதுவுமே கிடையாது. ஆனால் நம்மில் பலர் ஞானிகளாக இருப்பது இல்லை ரோகிகளாகவும், போகிகளாகவும் கிடக்கிறோம். அதனால் தான் செய்த வேலைக்கு கூலி கிடைத்தே ஆகவேண்டுமென்று பிடிவாதம் செய்கிறோம். எனது செயலுக்கு நானே அதிகாரி என்று அகம்பாவம் கொள்கிறோம். அதனால் சுமக்கவே முடியாத துன்ப மூட்டைகள் நமது தலைமீது ஏறுகிறது எத்தனை ஆறுகளில் நீராடினாலும் நமது முதுகில் ஒட்டி கொண்டிருக்கின்ற அழுக்குகள் போக மறுக்கின்றன.

மனிதனும் செயல்படுகிறான், இறைவனும் செயல்படுகிறான். ஆனால் மனிதனது செயல் மட்டும் கர்மாவாக மாறுகிறது. இறைவன் செயல் அப்படி ஆவதில்லை. அது ஏன்? நாம் செயல்மீது பற்று வைக்கிறோம் அக்கறை கொள்கிறோம். இறைவனுக்கு அவைகள் கிடையாது. அதனால் தான் இறைவன் செய்வது அகர்மம் மனிதன் செய்வது கர்மம் எனப்படுகிறது. சரீரத்தால் செய்வது கர்மம். ஞானத்தால் செய்வது அகர்மம் அதனால் தான் கண்ணன் நம்மை போன்ற மூடர்களுக்கு வாழும் வகையை மிக சுலபமாக எடுத்து காட்டுகிறான். கர்மத்தையும், அகர்மத்தையும் நன்றாக பகுத்து ஆய்ந்து கர்மத்தில் அகர்மத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும் இணைத்து பார் வாழும் வகை உனக்கு புரியுமென்று தெளிவாக சொல்கிறான்.

கடிவாளத்தில் அகப்படாத குதிரைகள் போல தாறுமாறாக ஓடுகின்ற மனதையும் இச்சைகளுக்கு ஆட்பட்டு தன் போக்கிலே நம்மை இழுத்து சென்று பாடாய் படுத்தும். உடலையும் ஆசை மிகாமல் பற்றுதல் கூடாமல் மோகம் தலைக்கு ஏறாமல் அடக்கி அல்லது மனதும் உடம்பும் ஆசையும் செய்யும் ஜால வித்தைகளை கண்டும் காணாமல் விட்டு விட்டு சரீரத்தை கொண்டு எந்த செயலை செய்தாலும் அதில் கர்மம் என்ற விலங்கு விழவே விழாது நான் எனது என்ற ஈடுபாடு வருகிற போது தான் மனிதனுக்கு கர்மமும் வருகிறது அதன் வழியாக பிறவிகளும் வருகிறது.

**என்னை ஆட்சி செய்வது நான் அல்ல கிருஷ்ணன் என்பதை உணரும் போது ஞானம் வருகிறது ஞானம் யோகமாக மாறி கர்மா என்ற காரிருளை பிறப்பற்ற வெளிச்சமாக மாற்றுகிறது.**

வீடு பேறு இல்லாத தொடர்ச்சி யான பிறவிகளை அனுபவித்து கொண்டிருப்பதற்கு யார் காரணம் எது மூலம் என்று அறிந்து கொள்ளும் அறிவும் அக்கறையும் இல்லாதவன் நம்பிக்கையற்றவன் ஒரு நீர் குமிழி போல அழிந்து போகிறான். சந்தேகம் உள்ளவனுக்கு எங்கேயும் இடமில்லை. அவன் பூமி வாழ்க்கையும் சந்தேகித்து இழக்கிறான் மறு வாழ்க்கையையும் உறுதிப்படுத்தாமல் தவிக் கிறான். மழலை மொழி கேட்டாலும் மங்கையரின் காதல் மொழி கேட்டாலும் அன்னையரின் அமுதமொழி கேட்டாலும் நம்பிக்கை வர வில்லை அவனுக்கு இது கிடைக்குமா? இது நிலைக் குமா? இது நிஜம்தானா? என்ற சந்தேகம் வந்துகொண்டே இருக்கிறது. இவனால் எந்த இன்பத்தையும் பெறமுடியாது. உடம்பை ஒடுக்கி தவம் செய்தாலும் மனதை ஒடுக்கி தியானம் செய்தாலும் அரைநாள் கூட அவனால் உட்கார முடியாது.

கிருஷ்ணனை பற்றிய ஞானம் மனிதனது சந்தேகத்தை அறுக்கிறது. என்னை ஆட்சி செய்வது நான் அல்ல கிருஷ்ணன் என்பதை உணரும் போது ஞானம் வருகிறது ஞானம் யோகமாக மாறி கர்மா என்ற காரிருளை பிறப்பற்ற வெளிச்சமாக மாற்றுகிறது. அஞ் ஞானம் நிறைந்த இதயத்தில் கிருஷ்ணுக்கு இடமில்லை எனவே அங்கே துயரம் மட்டுமே தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. உன்னை உணர உன்னை உயர்த்த உனது ஜென்மம் முற்றுப்புள்ளி பெற கிருஷ்ணை அறிந்து கொள் கிருஷ்ணனை புரிந்துகொள் கண்ணனை கார்மேக வண்ணனை உன் இதயத்தில் குடி வைத்தால் நீ எல்லாவற்றையும் பெறலாம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

ஆன்மிகம் ○ தத்துவம் ○ உடல்நலம் ○ பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

# ஈஸ்வர தரிசனம் தரும் ஆரத்தி

## ஆரத்தியின் மகத்துவம்:

கலியுகத்தில் கடவுள் இருக்கிறார் என்று மனிதனை உணரச் செய்ய உதவும் சுலபவழி ஆரத்தியாகும். ‘கலியுகத்தில் பரவலாக எழும் கேள்வி, கடவுள் இருக்கிறாரா அல்லது இல்லையா என்பதே; இதற்கு விடை பகரும் வகையில், நமக்கு ஈஸ்வர தரிசனத்தைப் பெற்றுத் தரும் சுலப வழியாக ஆரத்தி விளங்குகிறது. ஆரத்தியின் அர்த்தம் இறைவனை தீவிர ஆர்வத்தோடு கூப்பிடுவது என்பதே. அவ்வாறு ஒருவன் கூப்பிடுவானேயானால், தெய்வங்கள் தங்களுக்குரிய ரூபத்தோடு தரிசனம் கொடுப்பார்கள் அல்லது ஜோதிர்மயமான ரூபத்தில் காட்சி கொடுப்பார்கள்.

தெய்வங்கள் ஸ்துதி பிரியர்கள் மற்றும் கருணை மிக்கவர்கள். அதனால் அவர்களின் ஸ்துதியான ஆரத்தியைச் செய்யும் பக்தர்களினால் அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்.

ஆரத்தியை இயற்றியவர்கள், உன்னத நிலையை அடைந்த மகான்களானதால், அவர்களின் சங்கல்ப சக்தி நமக்கு நன்மை பயக்கிறது: மகான்களும், பக்தர்களுமே ஆரத்தியை இயற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய சங்கல்ப சக்தி மற்றும் ஆசீர்வாதத்தால், நமக்கு உலக முன்னேற்றம் மற்றும் ஆன்மீக முன்னேற்றம் ஏற்படுகிறது.

ஒரு ஜீவனின் சூஷூம்னா நாடி விழிப்படைவதால் அவனுடைய ஆன்மீக உணர்வு விழிப்படைகிறது: பக்தி மார்க்கத்தில் ஈஸ்வரனிடம் பக்தி பாவத்தை விரைவில் ஏற்படுத்துவது அவசியமாகிறது.

ஆரம்ப நிலையில் உள்ள சாதகனுக்கு, ரூபமில்லாத நிர்குண பரப்ரம்மத்தின் மேல் ஆன்மீக உணர்வு செலுத்துவது கடினமாகிருக்கிறது. இதற்கு மாறாக, ஸகுண ரூபமாக மனித ரூபமெடுத்து, இறைவன் தோன்றும் போது, அவனிடத்தில் ஒரு நெருக்கம் ஏற்படுகிறது. விரைவில் ஆன்மீக உணர்வும் தோன்றுகிறது. ஆரத்தி ஸகுண உபாசனையின் ஒரு சுலப வழியாகும்.

‘ஆரத்தி சமயத்தில், ஆரத்தி சப்தத்தின் சூட்சும ரூபம், இறைவனின் படத்தை அல்லது மூர்த்தியை மிருதுவாக தொட்டு, பிறகு ஆரத்தி பாடுபவர் கேட்பவர்களை வந்தடைகிறது. அதன் மூலம் ஜீவன்களின் சூட்சும சரீரம் நன்மை அடைகிறது. ஆரத்தியின் ஒவ்வொரு சப்தத்தின் ஸாத்வீகத் தன்மையும், ஜீவனின் சூட்சும சரீரத்தை வந்தடைகிறது. இதனாலேயே, ஆரத்தி முடிந்த பிறகு நாம் லேசாக உணருகிறோம். ஆர்த்தியின் சப்தத்தால் ஒரு ஜீவனின் சூஷூம்னா நாடி விழிப்படைவதால் அவனுடைய ஆன்மீக உணர்வு விழிப்படைகிறது.’

அனுபூதிகளால் ச்ரத்தை அதிகமாகிறது: ஆரத்தி சமயத்தில், தெய்வங்களின் மேலுள்ள ஆன்மீக உணர்வு அதிகமாகிறது. இதனால், இறையனுபூதி கிடைக்கிறது. இது தெய்வத்தின் மேல் உள்ள ச்ரத்தை அதிகமாக உதவுகிறது.

ஆரத்தி சமயத்தில் இறை தத்துவம் அதிக செயல்பாடோடு இருப்பதால், இறைவனின் தெய்வீக சக்தி சாதகர்களை வந்தடைந்து நன்மை பயக்கிறது: ஆரத்தி சமயத்தில் இறை தத்துவம் அதிக செயல்பாடோடு இருப்பதால், இறைவனின் சக்தியும் சைதன்யமும் வந்தடைந்து, நன்மை விளைவிக்கிறது. அதனாலேயே, மற்ற எல்லா சமயங்களைக் காட்டிலும், ஆரத்தி சமையத்தில், கோவிலில் இருப்பது அதிக பலனைக் கொடுக்கிறது.

## வாயு மண்டலம் தூய்மையாகிறது:

‘ஆரத்தி மூலமாக நிர்மாணமாகும் நாத அதிர்வலைகளால் ஜீவனை சுற்றியுள்ள வாயு மண்டலம் சாத்வீகமாக மாறி அந்த சூழல் தூய்மையாகிறது’

## ஆரத்தியை எப்பொழுது செய்வது?

காலை மற்றும் மாலைவேளைகளில் ஏன் ஆரத்தி செய்ய வேண்டும்? ‘சூரிய உதயத்தினால், இரவில் சுற்றுப்புற சூழலில் இருந்த ரஜோ தமோ அதிர்வலைகள் நாசமடைகின்றன.

பிரம்மாண்டத்திலுள்ள தெய்வங்களின் தேஜ தத்துவ அதிர்வலைகள் வெளிப்பட ஆரம்பிக்கின்றன. அச்சமயத்தில், வெளிப்படும் காக்கும் தெய்வீக சக்தியை வரவேற்பதற்காக, ஆரத்தி செய்ய வேண்டும். இதற்கு சூர்யாஸ்தமன சமயத்தில் ரஜ தம அதிர்வலைகளை நாசம் செய்வதற்காக, ஆரத்தியின் மூலம் தெய்வங்களின் அழிக்கும் சக்தியை ஆவாஹனம் செய்து வழிபட வேண்டும். அதனால், சூர்யோதயம் மற்றும் சூரிய அஸ்தமனம் ஆகிய இரண்டு நேரங்களிலும் ஆரத்தி செய்ய வேண்டும்.

## சூரியாஸ்தமன சமயத்தில் ஆரத்தி செய்வதன் சாஸ்திரம் என்ன?:

சூர்யாஸ்தமன சமயத்தில், சூர்ய கிரணங்களின் தேஜ தத்துவம் குறைந்து கொண்டே வருகிறது.இக்காரணத்தால், வாயு மண்டலத்தில் உள்ள ரஜ தம துகள்கள் அதிக பலம் பெற்று அந்த அதிர்வலைகளும் அதிகமாகின்றன. இந்த சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டு தீய சக்திகள், தங்களின் நடமாட்டத்தை அதிகரிக்கிறன. இந்த ரஜ தம நிரம்பிய வாயு மண்டலத்தால், கஷ்டம் ஏற்படாதிருக்க ஆரத்தியின் மூலம் எழும்பும் நாத அதிர்வலைகளைக் கொண்டு தெய்வீக அதிர்வலைகளை ஆவாஹனம் செய்ய வேண்டும். பிரம்மாண்டத்தில் அச்சக்திகளை வரவழைப்பது



அவசியமாகிறது. ஆரத்தியின் மூலமாக, வாயு மண்டலத்தில், சைதன்ய அதிர்வலைகள் அதிகரிப்பதால், கஷ்டம் தரக்கூடிய பிற அதிர்வலைகளின் சக்தி குறைகிறது. ஜீவனைச் சுற்றி பாதுகாப்பு கவசம் உருவாகிறது’.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு : 09380949626

# ஆறு கண் இரு கை இரு கால்



# மும்மூர்த்தியாக காட்சிதரும் குச்சனூர் சனீஸ்வரன்

செண்பகநல்லூர் என்ற பகுதியைச் சேர்ந்த அரசன் தினகரன் குழந்தைப்பேறின்மையால் அவதிப்பட்டான். குழந்தைக்காக இறைவனிடம் வேண்டிவந்தான். கோயிலில் அவனுக்கு அசரீரி ஒன்று கேட்டது.

அந்த அசரீரியில் அவனது வீட்டிற்குப் பிராமணச் சிறுவன் ஒருவன் வருவான் என்றும், அவனை வளர்த்து வர வேண்டும் என்றும், அதன் பிறகு அரசனுக்கு ஒரு குழந்தை பிறக்கும் என்றும் கூறப்பட்டது.

அசரீரியில் சொன்னபடி சில நாட்களில் பிராமணச் சிறுவன் ஒருவன் அவனிடம் வந்து சேர்ந்தான். அந்த மன்னனும் அந்தச் சிறுவனுக்குச் சந்திரவதனன் என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தான்.

அதன் பின்பு, அசரீரியில் சொல்லியபடியே அரசிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அரசனும், அரசியும் அந்தக் குழந்தைக்குச் சதாகன் என்ற பெயர் சூட்டி வளர்த்தனர்.

இரண்டு குழந்தைகளும் வளர்ந்து பெரியவர்களாயினர். சந்திரவதனன் மிகவும் அறிவுத் திறனுடன் இருந்தான். சதாகன் அப்படி இருக்கவில்லை. இதனால், அரசன் சந்திரவதனன் வளர்ப்பு மகனாக இருந்தாலும் அவனையே அரசனாக்குவது என்று முடிவு செய்து அவனுக்கே முடிசூட்டினான்.

## அரசனுக்கு சனி

இந்நிலையில் அரசன் தினகரனுக்கு சனி தோஷம் பிடித்தது. இதனால் தினகரன் பெரும் துன்பத்திற்கு ஆளானான். தந்தையின் துன்பத்தைக் கண்டு மனமுடைந்த சந்திரவதனன் சுரபி நதிக்கரைக்குச் சென்று சனிபகவானை வழிபடத்துவங்கினான்.

அவனுக்கு காட்சியளித்த சனீஸ்வரன் அவனது கோரிக்கை என்னவென்று கேட்டார். தினகர மன்னருக்குப் பதிலாக தன்னைப் பற்றிக்கொள்ள சந்திரவதனன் வேண்டினான். அதற்கு மறுத்துவிட்ட சனீவரன் கிரஹதோஷகாலகட்டத்தை மட்டும் ஏழரை வருடத்திலிருந்து ஏழரை மாதமாகக் குறைத்துவிட்டு மறைந்தார்.

அரண்மனைக்கு திரும்பிய சந்திரவதனன் இரும்பினால் ஒரு லிங்கம் செய்து திரும்பவும் அதே செண்பக வனத்திற்கு வந்தடைந்தான். இரும்பு லிங்கத்தை தியானம் செய்த இடத்தில் பிரதிஷ்டை செய்தான். பூசைப் பொருள்களாக பூசணி, கரும்புத் துண்டுகள், கீரைகள் மற்றும் எள் ஆகியவற்றை படையலிட்டான். தியானம் மேற்கொண்டான். அவனது தியானத்திற்கு மனமிறங்கிய சனீஸ்வரன் அவன் முன்பு காட்சி தந்து என்ன வேண்டும் என்று கேட்டார்.

“முதுமையில் கஷ்டம் வந்தால் யாராலும் தாங்க முடியாது. எனது தகப்பனாரான தினகர மன்னருக்குப் பதிலாக என்னைப் பற்றிக் கொள்ள வேண்டும்”, என்று மீண்டும் மன்றாடினான். அவனது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சனிபகவான், ஏழரை மாத கிரஹதோஷத்தை ஏழரை நாழிகையாகக் குறைத்துவிட்டு மறைந்தார்.

இதே காலநேரத்தில்... மணி நகரத்தில் இளவரசனான சதாகன் தனது அண்ணன் சந்திரவதனன் பிரிவைத் தாங்காமல் அரண்மனையை விட்டு வெளியேறினான். அண்ணனைத் தேடி அதே வனப்பகுதிக்குச் சென்றவன் களைப்பில்

## குச்சனூர் சனீஸ்வரன் தரும் பலன்கள்

- தீராத வயிற்றுநோய் நீங்கும்
- திருமணத்தடை விலகும்
- சந்தான பாக்கியம் உண்டாகும்
- நொடித்துப்போன வியாபாரம் இலாபத்திலே இயங்கும்
- விளைச்சல் குன்றிய விளை நிலங்கள் அமோக மகசூல் பெறும்
- நீர்வளம் குன்றிய கிணறுகளில் நீர் வளம் பெருகும்
- நீதிமன்றத்தில் நீதி கிடைக்கும்
- விபூதி குங்குமத்தை தினமும் அணிந்தால் உடலும் உள்ளமும் வலுவடையும்.

ஒரு மரத்தடியில் படுத்து தூங்கிவிட்டான். பிள்ளைகளை காணாமல் மனம் பதறிய தினகரன் மன்னன் பிள்ளைகளைத் தேடுவதற்கு வீரர்களை அனுப்பி வைத்தார்.

சந்திரவதனன் தியானம் செய்த இடத்திற்கு வந்த வீரர்கள் உறைந்து போயினர். இளவரசன் சதாகனின் தலை, கை, கால், ஆகியவற்றை துண்டித்து இரும்பு லிங்கத்திற்கு முன்பு படையலிட்டு குடலை கழுத்தில் மாலையாக அணிந்து சந்திரவதனன் தியானத்திலிருப்பதைக் கண்டனர்.

பதறிய வீரர்கள், இச்செய்தியை மன்னனிடம் கூறினர். தினகர மன்னன் செண்பக வனத்திற்கு விரைந்தான் தன் அருமை மகனுக்கு ஏற்பட்ட நிலை கண்டு நெஞ்சம் பதறினான் சந்திரவதனன் கழுத்தை வெட்ட வீரர்களுக்கு உத்தரவிட்டார்.

வீரர்கள் கூறிய வாளுடன் சந்திரவதனனை கொல்ல முற்படும்போது, சனிபகவான் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்.

அதே வனப்பகுதியில் அயர்ந்து தூங்கிய இயவரசன் சதாகன் திடுக்கிடெழுந்து சம்பவ இடத்திற்குச் சென்றான். உயிருடன் சாதகனைப் பார்த்த மன்னன் திகைப்பில் ஆழ்ந்தான்.

உடல்பாகம் துண்டு துண்டாக்கப்பட்டு கிடந்தவன் எவ்வாறு உயிருடன் காட்சியளிக்கிறான் என்று குழம்பினான்....

இதைக் கண்ட சனீஸ்வரன் கிரஹதோஷத்தினால் பூசைப் பொருட்களான பூசணி இளவரசன் சதாகனின் தலையாகவும், கரும்புத்





துண்டுகள் கை, கால்களாகவும், எள் கீரை குடலாகவும் தோற்றமளித்ததை தெரியப்படுத்தினார்.

உண்மையை அறிந்த தினகர மன்னன் தான் செய்த தவறை உணர்ந்து, தனது உடைவாளால் தன் தலையை வெட்டமுற்பட சனீஸ்வரன் தடுத்தாட்கொண்டார். சனீஸ்வர பகவானே சந்திரவதனனை குலிங்க நாட்டு மன்னராக முடிசூட்டினார். சந்திரவதனம் தியானம் செய்த இடத்தில் குச்சுப்புற்களால் கோவில் கட்ட உத்தரவிட்டு மறைந்தார்.

அதே நேரம் சந்திரவதனன் தியானம் செய்த செண்பக வனத்தில் சந்திரவதனனால் பிரதிஷ்டை செய்து வழிபட்ட இரும்புலிங்கம் இருந்த இடத்தில் பூமியை பிளந்து கொண்டு ஒரு கல்தூண் எழுந்து நின்றது. சுயம்புவாக சனீஸ்வரன் பூமியிலிருந்து எழுந்திருப்பதை உணர்ந்தான் சந்திரவதனன்.

சனீஸ்வரன் ஆணைப்படி குச்சுப்புற்களால் கோயில் கட்டினான்; குச்சுப் போன்ற கோயிலுக்கு கீழே சனீஸ்வரன் சுயம்புவாக காட்சி தந்ததால், "குச்சன்"என்றும் அந்த இடம் "குச்சனூர்" என்றும் வழங்கப்பட்டு வருகிறது.

கால வரம்பிற்கு அப்பாற்பட்ட குச்சனூர் சனீஸ்வரனைப் பற்றி கஸ்திய கௌசிக, சிவநாடி ஜோதிடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது தற்போது தெரிய வந்துள்ளது. சுயம்பு மூலவர் நெற்றியில் நாமம் இடப்பட்டிருப்பது சூரிய நாராயண புத்திரன் (ரகு வம்சம்) என்பதை உணர்த்துவதற்கே.

ஈஸ்வரபட்டம் பெற்றிருப்பதால் கிரீடத்தில் விபூதிபட்டம் அணியப்பட்டுள்ளது. எனவே இங்கே வைணவரும் சைவரும் வந்து வழிபடுகின்றனர்.

குச்சனூர் சனீஸ்வர பகவான் தமிழகப் பெருங்கோவில்களில் சனீஸ்வர பகவானை உபசந்நிதியிலேயே காண முடியும். ஆனால், குச்சனூரில் அப்படியல்ல!

சனீஸ்வர பகவான் தலை நாயகனாக மும்மூர்த்தியாக மற்ற தெய்வங்களோடு இணை இல்லாமல் தனிப்பெருந்தெய்வமாக நின்று விளங்குகிறார்.

சனீஸ்வர பகவானே இங்கு மூலவர். 'குச்சனூரான்' என்ற திருப்பெயரும் பேச்சு வழக்கில் இங்கே வழங்கி வருகின்றது.

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் சுரபி நதி எனப் புராணங்களில் போற்றப்படும் பெருமையுடைய சுருளி ஆற்றின் கிளையாக இருக்கும் முதன்மை வாய்க்காலின் மேற்குக் கரையில் குச்சனூர் எனுமிடத்தில் சனீவர பகவான் கோவில் அமைந்திருக்கிறது.

தலவிருட்சமும் மூலஸ்தானமும்

மூலஸ்தானத்தில் உள்ள மூலவர் சுயம்புவாகத் தோன்றியவர். கருநிறமுடன் லிங்கவடிவில் தோற்றம். உடன் உற்சவ மூர்த்தியும் உள்ளார். ஆண்டுக்கு ஒருமுறை உற்சவர் பவனி வருவார்.

முப்பெரும் தெய்வங்களான சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகியோர் இந்த சுயம்பு சனீஸ்வர பகவானுக்குள் சேர்ந்து இருப்பதால் (ஐக்கியமாகி இருப்பதால்) மூலவருக்கு ஆறு கண்கள் இருக்கின்றன.

அரூபி வடிவமான லிங்கம் சுயம்புவாக வளர்ந்து கொண்டேயிருப்பதால் மஞ்சனக் காப்புக் கட்டிய நிலையில் அது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

திருக்கோவிலின் வளாகத்தில் விநாயகப் பெருமான், முருகன் சந்நிதிகள் உள்ளன. உட்புறமாக லாடசந்நியாசியின் கோயில் உள்ளது. வாய்க்கால் கரையில் சோணை கருப்பனசாமி கோவில் உள்ளது. அதற்குப் பக்கத்தில் கன்னிமார் கோவிலும், நாகர் கோவிலும் உள்ளன. மூலஸ்தானத்திற்கு பின்புறம் விடத்தலை மரம் உள்ளது. விடத்தலை மரம் ஸ்தலவிருட்சமாகும்.

## காகத்திற்கு முதல்மரியாதை

நாள்தோறும் முக்கால பூஜைகளும் தவறாமல் நடைபெறுகிறது. பூஜை முடிந்தபின் தளிகை காகத்திற்கு வைக்கப்படும். காகம் எடுக்காவிட்டால் அன்றைய தினம் தடையாகக் கருதி மீண்டும் பூசாரிகள் மன்னிப்புக் கேட்டு மீண்டும் காகத்திற்கு தளிகையை வைப்பர்.

தளிகையை காகம் உண்டபின்தான் பக்தர்களுக்கு பரிமாறப்படும். இது மிகவும் சிறப்பானது. தவிர, சனி பகவானுக்கு உகந்தது என எள் பொங்கலும் வைக்கப்படும்.

சனிப்பெயர்ச்சியும் ஆடித்திருவிழாவும் சனிப் பெயர்ச்சி தினம் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. ஆடிமாதம் சனிக்கிழமை தோறும் உற்சவகாலம் சிறப்பாகக் கொண்டாடப்படும். மூன்றாம் சனிக் கிழமை மிகவும் பிரசித்தமாகும்.

இத்தலத்தை தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் 045–54321108

தொகுப்பு ச.நாகராஜன்,
தொலைபேசி எண்: 8825844033






# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.